## (இ) நாணயத்தினதும் வங்கித் தொழிலினதும் போக்குகள்

பண நிரம்பலானது, 1958ஆம் ஆண்டு தொடக்கம் காட்டி வந்த தொடர்ச்சியான விரிவிற்குப் பின்னர், 1966ஆம் ஆண்டில் 568 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு சுருக்கத்தைப் பதிவுசெய்தது. வெளிநாட்டு இருப்புச்சொத்துக்கள் வீழ்ச்சியுறும் சந்தர்ப்பத்திலே பணநிரம்பல் விரிவடையும் தன்மைத்தான போக்குடன் விளங்குவதுபற்றி, முன்னைய ஆண்டு அறிக்கைகளிற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே, 1958ஆம் ஆண்டிலிருந்து 1964ஆம் ஆண்டு வரையான காலத்தின்போது, சென்மதி நிலுவையில் ஏற்பட்ட குறையின் விளைவாக வெளிநாட்டு வங்கி இருப்புச் சொத்துக்கள் சுருங்கிய போதிலும், பணநிரம்பலானது, முற்கூறிய ஆண்டுகளில் அதன்மீது விரிவுக் காரணிகள் கொண்டு வந்த விளைவின் காரணமாக, கணிசமான அளவு விரிவடைந்துள்ளது. முக்கியமாக அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டக்குறைகளின் பணவீக்க நிதியீட்டமும், தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சியும் - வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் வீழ்ச்சியுற்றமையினாலெழுந்த சுருக்க விளைவினை பயனறச் செய்வதற்குப் போதியளவு பலம் வாய்ந்தனவாக அமைந்துள்ளன. பணக்குறையின் நிதியீட்டம் பெரும்பாலும் வங்கிகள் அல்லாத மூலங்களிலிருந்தே செய்யப்பட்டதனால், 1965ஆம் ஆண்டில், வரவு செலவுத்திட்டத்தின் விரிவுத் தாக்கம் கணிசமான அளவு குறைக்கப்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும். எனினும், 1965ல் கூட பிரதானமாக வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்டவொரு சீர்திருத்தத்தின விளைவாக, பண நிரம்பலானது - முன்னைய ஆண்டுகளிலிருந்ததைவிட மிகக் குறைவான அளவி லெனினும் ஓர் அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

ஆனால், சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட சீர்திருத்தம் 1966ஆம் ஆண்டிற்குள் தொடர்ந்து ஏற்படவில்லை. இவ்வாண்டின்போது வெளிநாட்டு வங்கி இருப்புச் சொத்துக்களில் கூரிய வீழ்ச்சியொன்று ஏற்பட்டது. இது, பணநிரம்பலின் மீது பலமானவொரு சுருக்க விளைவினை விளைவித்தது. இதனினதும், ஏனைய சுருக்கக் காரணிகளினதும் இணைந்த விளைவினை, குறிப்பிட்ட சில விரிவுக் காரணிகள், ஓரளவில் மட்டுமே ஈடுசெய்தன. அரசாங்கம் வங்கித்தொழில் முறையிடமிருந்து கடன் உதவியை நாடுதலில் ஏற்பட்டவொரு அதிகரிப்பே, மேற்கூறிய விரிவுக்காரணிகளுள், மிக முக்கியமானதாகவுள்ளது. இதன் பலனாக, பணநிரம்பலானது, கடந்த ஆண்டின் இறுதியிலிருந்த 17157 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1966ஆம் ஆண்டு முடிவில் 16589 இலட்சம் ரூபாய்களாக வீழ்ச்சியுற்றுள்ளது. அட்டவணை II (இ) 1, பணநிரம்பலின் 1966ஆம் ஆண்டிற்குரிய மாதாந்த எண் தொகைகளையும், அதன் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குரிய எண் தொகைகளையும் தருகின்றது.

இவ்வாண்டின்போது பணநிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஒரே விதமானதாக இருக்கவில்லை. இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களிலும் பணநிரம்பல் 494 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றபின், அடுத்த நான்கு மாதங்களிலும் அது 906 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, யூலை மாத முடிவில் 17569 இலட்சம் ரூபாய்கள் ஆக அமைந்து ஒரு உச்ச நிலையையடைந்தது. இவ்வாண்டின் இறுதி ஐந்து மாதங்களிலும், பணநிரம்பலில் கூரிய வீழ்ச்சிப் போக்கு ஏற்பட்டது. எனவே, இவ்வாண்டு முழுவதனையும் நோக்குகையில், பணநிரம்பலிலே குறிப்பிடத்தக்களவு சுருக்கம் காணப்பட்ட பொழுதிலும், 1966ஆம் ஆண்டிற்குரிய பணநிரம்பலின் சராசரிநிலை, கடந்த ஆண்டிலிருந்ததிலும் பார்க்க உயர்ந்ததாக உள்ளது. 1966ஆம் ஆண்டிற்குரிய பணநிரம்பலின் மாதச் சராசரி 16860 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. இது, 1965ஆம் ஆண்டின் தொடர்பான சராசரியைவிட 360 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்திருந்தது. இத்துடன் கூடி இவ்வாண்டின் இறுதியாகவுள்ள சில மாதங்களிலே பணநிரம்பலில் ஏற்பட்ட சுருக்கம்,

**அட்டவணை II (இ) 2**

## பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1960 – 1961 விரிவுக் காரணிகள் | 1960 – 1961 சுருக்கக் காரணிகள் | 1961 – 1962 விரிவுக் காரணிகள் | 1961 – 1962 சுருக்கக் காரணிகள் | 1962 – 1963 விரிவுக் காரணிகள் | 1962 – 1963 சுருக்கக் காரணிகள் | 1963 – 1964 விரிவுக் காரணிகள் | 1963 – 1964 சுருக்கக் காரணிகள் | 1964-1965 விரிவுக் காரணிகள் | 1964-1965 சுருக்கக் காரணிகள் | 1965 – 1966 விரிவுக் காரணிகள் | 1965 – 1966 சுருக்கக் காரணிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) ... | — | 78·6 | — | 91·1 | — | 53·2 | 16·9* | — | 79·7** | — | — | 196·3 |
| 2. தனியார் துறை‡ | 21·7 | 28·8 | 42·2 | 50·9 | 132·3 | 63·4 | 82·6 | 57·4 | 19·3 | 75·4 | 138·7 | 79·7 |
| (அ) ஏனைய தனியார்த்துறைக் கூறுகளுக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன்‡ | 12·5 | — | 42·2 | — | 124·2 | — | 82·6 | — | 10·1 | — | 42·6 | — |
| (ஆ) கூட்டுறவு நிலையங்களுக்குள்ளான வர்த்தக வங்கிக் கொடுகடன் | — | — | — | — | — | — | — | — | — | 6·9 | 25·8 | — |
| (இ) கூட்டுறவு நிலையங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ... | — | — | — | — | — | — | — | — | — | 2·1 | — | 2·3 |
| (ஈ) ஏனைய தனியார் துறைக் கூறுகளின் தவணை, சேமிப்பு வைப்புக்கள்... | 9·2 | — | — | 50·2 | — | 63·4 | — | 52·5 | — | 46·2 | — | 65·4 |
| (உ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும்(தேறிய) | — | 28·8 | — | 0·7 | 8·1 | — | — | 4·9 | — | 20·2 | — | 12·0 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் | | | | | | | | | | | | |
| (ஊ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் ... | — | — | — | — | — | — | — | — | 7·8 | — | 20·1 | — |
| (எ) வர்த்தக வங்கிகளிடமுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | — | — | — | — | — | — | — | — | 1·4 | — | 50·2 | — |
| 3. அரசாங்கத்துறை | 173·5 | 9·1 | 250·2 | 94·7 | 166·9 | 19·0 | 133·6 | 57·7 | 120·3 | 53·2 | 207·5 | 126·9 |
| (அ) வர்த்தக வங்கி உடைமைகளாகிய இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், அரசாங்க இறக்குமதி உண்டியல்கள் ஆகியன ... | 21·4 | — | 71·3 | — | 20·4 | — | 3·6 | — | 92·3 | — | — | 64·2 |
| (ஆ) மத்திய வங்கி உடைமைகளாகிய இறைசேரி உண்டியல்களும், அரசாங்க அரசாங்க, உத்தரவாதப் பிணைகளும் ... | 140·8 | — | 175·9 | — | 139·5 | — | 123·2 | — | — | 38·7 | 155·9 | — |
| (இ) மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் ... | 1·9 | — | 3·0 | — | 7·0 | — | 6·8 | — | 28·0 | — | 26·4 | — |
| (ஈ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புகளும், கணக்குகளும் (தேறிய) | — | 9·1 | — | 18·6 | — | 10·7 | — | 54·8†† | — | 4·5 | 25·2 | — |
| (உ) வங்கித் தொழில் முறையிடமுள்ள அரசாங்க வைப்புக்களும் திறைசேரியிலும், கச்சேரிகளிலும் உள்ள பண மிச்சங்களும் ... | 9·4 | — | — | 76·1 | — | 8·3 | — | 2·9 | — | 10·0 | — | 62·7 |
| 4. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சீராக்கங்கள் ... | 1·0 | — | — | 1·7 | — | 0·2 | — | 2·3 | 3·2 | — | — | 0·1 |
| மொத்த விரிவு/சுருக்கக் காரணிகள் ... | 196·2 | 116·5 | 292·4 | 238·4 | 299·2 | 135·8 | 233·1 | 117·4 | 222·5 | 128·6 | 346·2 | 403·0 |
| பணநிரம்பலின் மாற்றம் ... | +79·8 | | +54·0 | | +163·3 | | +115·8 | | +93·8 | | —56·8 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1964ம் ஆண்டு மாசி மாதம், அரசாங்க நிலையங்களிலிருந்து, மத்திய வங்கி கொள்வனவு செய்த 533 இலட்சம் ரூபாய்கள் முகவரிப் பெறுமானமுள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை உள்ளடக்கும். இக்கொடுக்கல் வாங்கலுக்கு இடமளிக்கும்போது, வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டு 364 இலட்சம் ரூபாய் களால் உண்மையில் வீழ்ச்சியுற்றன.

**1965ம் ஆண்டு வைகாசி மாதம் அரசாங்க நிலையங்களிலிருந்து மத்திய வங்கி கொள்வனவு செய்த 301 இலட்சம் ரூபாய்கள் முகவரில் பெறுமானமுள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை உள்ளடக்கும். இக் கொடுக்கல் வாங்கலுக்கு இடமளிக்கும்போது வங்கிகளின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள், 496 இலட்ச ரூபா அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றன. அரசாங்க நிலையங்களுக்கான கொடுப்பனவு, ரூபாய்களில் கொடுக்கப்பட்டது. இது பணநிரம்பலில் நேரடி விரிவுத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

‡கழிவுபட்ட ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமானம் வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் கீழ் அடக்கப்பட்டுள்ளது.

†கூட்டுறவு நிலையங்களையும், அரசாங்க கூட்டுத்தாபனங்களையும் பொறுத்தமட்டில் 1964/65ம் ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே தரவுகள் தனித்தனியாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. முன்னைய காலங்களுக்கான இத்தரவுகள் "ஏனைய தனியார்துறைக்கூறுகளின்" கீழ் அடக்கப்பட்டுள்ளன.

††அரசாங்க நிலையங்களுக்கான, மத்திய வங்கியினது பொறுப்புக்களின் அதிகரிப்பில் ரூபா 533 இலட்சமானது, அரசாங்க நிலையங்களுக்கான மத்திய வங்கியின் சமமான பெறுமானமுள்ள பிணைகளின் வெளியீடுகளை எடுத்துக்காட்டுகின்றது. எனினும், இதன்காரணமாக தேறிய பண ஆக்கம் ஏற்படவில்லை.

## அட்டவணை II (இ) I

### பண நிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | சதவீத மாற்றம் (1961ல் இருந்து 1962) | சதவீத மாற்றம் (1962ல் இருந்து 1963) | சதவீத மாற்றம் (1963ல் இருந்து 1964) | சதவீத மாற்றம் (1964ல் இருந்து 1965) | சதவீத மாற்றம் (1965ல் இருந்து 1966) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி ... ... ... | 1,207 | 1,426 | 1,347 | 1,468 | 1,615 | 1,693 | + 18·1 | — 5·5 | + 9·0 | + 10·0 | + 4·8 |
| பெப்புருவரி ... ... ... | 1,193 | 1,561 | 1,369 | 1,501 | 1,582 | 1,674 | + 30·8 | — 12·3 | + 9·6 | + 5·4 | + 5·8 |
| மாச்சு ... ... ... | 1,210 | 1,635 | 1,385 | 1,505 | 1,585 | 1,666 | + 35·1 | — 15·3 | + 8·7 | + 5·3 | + 5·1 |
| ஏப்பிறல் ... ... ... | 1,306 | 1,448 | 1,400 | 1,534 | 1,601 | 1,675 | + 10·9 | — 3·3 | + 9·6 | + 4·4 | + 4·6 |
| மே ... ... ... | 1,219 | 1,317 | 1,431 | 1,547 | 1,645 | 1,698 | + 8·0 | + 8·6 | + 8·1 | + 6·3 | + 3·2 |
| யூன் ... ... ... | 1,221 | 1,298 | 1,448 | 1,550 | 1,650 | 1,692 | + 6·3 | + 11·5 | + 7·0 | + 6·4 | + 2·5 |
| யூலை ... ... ... | 1,228 | 1,277 | 1,447 | 1,543 | 1,693 | 1,757 | + 4·4 | + 13·3 | + 6·6 | + 9·7 | + 3·8 |
| ஓகத்து ... ... ... | 1,231 | 1,270 | 1,474 | 1,529 | 1,674 | 1,702 | + 3·2 | + 16·1 | + 3·7 | + 9·5 | + 1·7 |
| செத்தெம்பர் ... ... ... | 1,261 | 1,294 | 1,499 | 1,549 | 1,675 | 1,681 | + 2·6 | + 15·8 | + 3·3 | + 8·1 | + 0·4 |
| ஒற்ரோபர் ... ... ... | 1,248 | 1,317 | 1,505 | 1,592 | 1,687 | 1,682 | + 5·5 | + 14·3 | + 5·8 | + 6·0 | — 0·3 |
| நவம்பர் ... ... ... | 1,251 | 1,307 | 1,533 | 1,603 | 1,677 | 1,655 | + 4·5 | + 17·3 | + 4·6 | + 4·6 | — 1·3 |
| திசெம்பர் ... ... ... | 1,289 | 1,343 | 1,506 | 1,622 | 1,716 | 1,659 | + 4·2 | + 12·2 | + 7·7 | + 5·8 | — 3·3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு பணச்சுருக்க நிலைமைகள் ஏற்படாமைக்கும், மீளப்பார்வையிடும் ஆண்டினபோது விலைகள் ஒப்பியல்பில் நிலைபேருனவையாக அமைந்தமைக்கும், ஒரு காரணமாக இருக்கலாம்.

## 1. (அ) பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள்

பணநிரம்பலின் மாற்றங்களுக்குப் பொறுப்பாகவுள்ள காரணிகள், அட்டவணை II (இ) 2இல் பகுத்தாராயப்பட்டுள்ளன. பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகளை முக்கிய பொருளாதாரத் துறைகள் வங்கிகளிடம் கொண்டுள்ள தொழிற்பாடுகளின்படி பாகுபடுத்தி இவ்வட்டவணையில் ஆராயப்பட்டுள்ளது. மீளப்பார்வையிடும் ஆண்டின்போது பணநிரம்பலில் ஏற்பட்ட சுருக்கத்திற்குப் பிரதான மூலமாக இருந்தது வெளிநாட்டுத் துறையே என்பது இவ்வட்டவணையிலிருந்து அவதானிக்கப்பாலதாயுள்ளது. வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள், 1963 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்று, நாட்டின் பணநிரம்பலின் வீழ்ச்சியைக் கொண்டுவரும் பலம்வாய்ந்ததொரு சக்தியாக அமைந்துள்ளன. இச்சுருக்க விளைவினை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துறை 806 இலட்சம் ரூபாய்களை உதவியுள்ளபோது, தனியார்துறையிடமிருந்து 590 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மேலுமொரு விரிவு விளைவு ஏற்பட்டது.

ஏற்றுமதி வருவாய்களின் கூரிய வீழ்ச்சியின் விளைவாக, இலங்கையின் சர்வதேசச் சென்மதி நிலுவை மோசமடைந்துள்ளது. இறக்குமதிச் செலவுகள் நிலைபேருனவையாக இருந்தன. இதனுல் விளைந்த இலங்கையின் வெளிநாட்டுச் சென்மதி நிலைமையின் சீர்கேடு, இவ்வாண்டின்போது 1392 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதான மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்கில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதலாக, மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 786 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன. இவ்வியக்கங்கள், வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட 214 இலட்சம் ரூபாய்கள் கொண்டவொரு அதிகரிப்பால், ஓரளவு மிதமாக்கப்பட்டுள்ளன. வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட மொத்த மாற்றத்தின் பணநிரம்பலின் மீதான சுருக்க விளைவு, 1963 இலட்சம் ரூபாய்களாக அமைந்தது.

பணநிரம்பலை அரசாங்கத் தொழிற்பாடுகள் எவ்விதம் பாதித்தன என்பதுபற்றிய, விவரங்கள் அட்டவணை II (இ) 2இல் தரப்பட்டுள்ளன. இப்பகுப்பிலிருந்து தெளிவாகின்ற குறிப்பிடத்தக்க உண்மை யாதெனில், 1965ஆம் ஆண்டிலேற்பட்ட 387 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சிக்கு முரணுக, மத்திய வங்கியின் இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள், இவ்வாண்டு 1559 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தமையேயாகும். அரசாங்கத்திற்கு மத்திய வங்கி அளித்த கடன் தொகை, தற்காலிக முற்பணத்தில் ஏற்பட்ட 264 இலட்சம் ரூபாய்கள் கொண்டவொரு உயர்ச்சியினுல், மேலும் அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டின்போதான அரசாங்கத் தொழிற்பாடுகளின் ஒரு சுருக்க விளைவு, 627 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பணமிச்சங்களின் சேகரிப்பேயாகும். இது, கடந்த மூன்று ஆண்டுகளிலிருந்தவற்றிலும் பார்க்கக் கணிசமான அளவு உயர்ந்ததாகும். இது, அரசாங்கத்தின் விசேட இணைக்கிணையான நிதிகள்[1] அதிகரித்ததன் காரணத்தினுலேயே முற்றிலும் ஏற்பட்டதாகும். அரசாங்கத்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்தும், மேற்கூறியதையொத்த பெரிய சுருக்கவிளைவொன்று ஏற்பட்டது. வர்த்தக வங்கிகளின்

---

1. வர்த்தக வங்கிகள், பொருள் உதவித்திட்டத்தின்கீழ் அவை இறக்குமதி செய்த பொருட்களுக்குச் சமமான ரூபாய்களை, இலங்கை மத்திய வங்கியிடமுள்ள அரசாங்கத்தின் விசேட இணைக்கிணையான நிதியொன்றில் கொடுப்பனவுசெய்யவேண்டுமென வேண்டப்பட்டுள்ளன.

இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், அரசாங்க இறக்குமதி உண்டியல்கள் ஆகிய உடைமைகளில் பல ஆண்டுகளாக ஏற்பட்டுவந்த தொடர்ச்சியான அதிகரிப்பிற்குப்பின், 1966ஆம் ஆண்டில் இவ்வுடைமைகளில் 642 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டபோது, முற்கூறிய போக்கு மாற்றப் பட்டது. அரசாங்கத்துறையினது தொழிற்பாட்டின் பணநிரம்பல் மீதான தேறிய விளைவு, 806 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு விரிவாகும்.

தனியார்துறையிலே, கூட்டுறவு நிலையங்களுக்கும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக் கும், ஏனைய தனியார் பகுதிகளுக்குமான வங்கிக் கொடுகடனில், ஓர் அதிகரிப்பு ஏற்பட்டது. கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன், கடந்த ஆண்டில் 69 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதற்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 258 இலட்சம் ரூபாய்களால் உயர்ச்சியடை ந்தது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும், ஏனைய தனியார் பகுதிகளுக்குமான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், 1965ஆம் ஆண்டிற்குரிய தொடர்பான தொகை களாகிய முறையே, 78 இலட்சம் ரூபாய்களுடனும், 101 இலட்சம் ரூபாய்களுடனும், ஒப்பிடுகையில், இவ்வாண்டில் முறையே, 201 இலட்சம் ரூபாய்களாகவும், 426 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன. இப்பகுப்புக்களுக்கான வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பினது இணைந்த விரிவுத் தாக்கம், 885 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. எனினும், 1963ஆம் ஆண்டிற்குரிய உச்சநிலைத் தொகையாகிய 1242 இலட்சம் ரூபாய்களைவிட இது கணிச மானளவு குறைவானதாகும். அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், வங்கித் தொழில் முறையிடமிருந்து அதிகரித்த கடன் தொகையினைப் பெற்றது மட்டுமன்றி, வங்கிகளிட முள்ள அவற்றின் தவணை வைப்புக்களையும் 502 இலட்சம் ரூபாய்களாற் குறைவடையச் செய்தன. இதனால் பணநிரம்பலின் மீதான விரிவுத் தாக்கம் அதிகரிக்கப்பட்டது. இவ்விரிவு விளைவுகள் யாவும், ஏனைய தனியார்துறைப் பகுதிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட 654 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வளர்ச்சியினால், ஓரளவு மிதப்படுத்தப்பட்டன. வங்கித் தொழில்முறையுடனான, தனியார்துறைத் தொழிற்பாடு களினது பணநிரம்பலின் மீதான தேறிய விளைவு, 590 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பாகும்.

பணநிரம்பலின் மீதான இம்மூன்று துறைகளினதும் தொழிற்பாடுகளின் இணைந்த விளைவு, 568 இலட்சம் ரூபாய்கள் கொண்டவொரு வீழ்ச்சியாகும். இது, அரசாங்கத் துறைக்கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பாகிய 806 இலட்சம் ரூபாய்களாலும், தனியார்துறைக்கான தேறிய கொடுகடனின் 590 இலட்சம் ரூபாய்களாலும் ஓரளவு ஈடுசெய்யப்பட்ட, வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சியாகிய 1963 இலட்சம் ரூபாய்களைக் கொண்டுள்ளது.

**1. (ஆ) வங்கிகளல்லாத தனியார்துறையின் திரவத்தன்மை**

பணநிரம்பலின் இரண்டு கூறுகளான நாணயமும், கேள்விவைப்புக்களும், பொது மக்களின் இரு மிகக்கூடிய திரவத்தன்மை வாய்ந்த நிதி இருப்புச் சொத்துக்களாகவும் உள்ளன. கேள்வி வைப்புக்கள், குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி குறைந்த நாடுகளில், பணத்தினைவிடக் குறைந்த திரவத்தன்மையுடையனவாகும். பணநிரம்பலின் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள், பொதுமக்களின் திரவத்தன்மை விருப்புரிமைகளைப் பாதிக்கும் பல பொருளாதாரக் காரணங்களாலும் பொருளாதாரமற்ற காரணிகளா லும் ஏற்படுகின்றன. பின்வரும் அட்டவணை, இலங்கையின் பணநிரம்பலின் அமைப்பை 1953ஆம் ஆண்டிலிருந்து காட்டுகின்றது.

அண்மை வருடங்களில் பொதுமக்கள் நாணயத்தை வைத்திருக்கும் போக்கிலே ஓர் அதிகரிப்பிருந்ததுபற்றி, முந்திய ஆண்டு அறிக்கைகளிலே கூறப்பட்டுள்ளது. மேற் காணும் அட்டவணை II (இ) 3 காட்டுவது போல, மொத்தப் பணநிரம்பலின் நாணயத் தின் விகிதம், 1958ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்து வந்துள்ளது. இது, 1960ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 50 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்தது. 1964ஆம் ஆண்டிலும் 1965ஆம் ஆண்டிலும் இவ்விகிதத்திலே, அது 1963ஆம் ஆண்டில் அடைந்த 55 சதவீத மட்டத்திலிருந்து, ஒரு சிறிய வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும், 1966ஆம் ஆண்டிலே இவ்விகிதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 52·5 சதவீதத்திலிருந்து, 53·2 சதவீதத்திற்குச் சிறிதளவாக அதிகரித்துள்ளது. ஆயினும் மாதாந்தச் சரா சரியானது, 1965ஆம் ஆண்டிற்குரிய அமைப்பிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்க மாற்ற மெதையும் காட்டவில்லை.

### அட்டவணை II (இ) 3

### பணநிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | பொதுமக்களிடமுள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பணநிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பணநிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்தப் பணநிரம்பலின் சதவீதமாக | |
| 1953 | 335·3 | 40·6 | 491·5 | 59·4 | 826·8 |
| 1954 | 341·8 | 35·7 | 615·3 | 64·3 | 957·1 |
| 1955 | 384·5 | 35·8 | 688·4 | 64·2 | 1,072·9 |
| 1956 | 401·1 | 35·6 | 725·7 | 64·4 | 1,126·8 |
| 1957 | 434·9 | 41·8 | 605·2 | 58·2 | 1,040·1 |
| 1958 | 529·8 | 49·2 | 546·9 | 50·8 | 1,076·8 |
| 1959 | 565·0 | 48·0 | 612·7 | 52·0 | 1,177·7 |
| 1960 | 595·3 | 49·2 | 613·6 | 50·8 | 1,208·9 |
| 1961 | 692·2 | 53·8 | 596·4 | 46·2 | 1,288·6 |
| 1962 | 712·6 | 53·1 | 630·0 | 46·9 | 1,342·7 |
| 1963 | 828·4 | 55·0 | 677·7 | 45·0 | 1,506·0 |
| 1964 | 853·0 | 52·6 | 768·8 | 47·4 | 1,621·8 |
| 1965 | 901·4 | 52·5 | 814·3 | 47·5 | 1,715·7 |
| 1966 | 882·5 | 53·2 | 776·4 | 46·8 | 1,658·9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பணநிரம்பலானது பொதுமக்களின் முதன்மைத்திரவ இருப்புச் சொத்துக்களாக மட்டுமே அமைகின்றது. பொதுமக்கள், பண வைப்புக்களையும், கேள்வி வைப்புக்களையும் தவிர, சிலவகையான இரண்டாந்தரத்திரவ இருப்புச் சொத்துக்களையும் உடைமையாகக் கொண்டுள்ளார்கள். இவை முக்கியமாக, சேமிப்பு வைப்புக்கள், தவணை வைப்புக்கள், பலவித அரசாங்கப் பத்திரங்கள் ஆகியனவாகும். இந்நிதி இருப்புச் சொத்துக்கள், அவற்றினைக் கொண்டு கொடுப்பனவுகளைச் செய்வதற்கேற்ற விதத்தில் அமையாவிடினும், இவற்றை ஏறக்குறைய உடனடியாகப் பணமாக மாற்றிக்கொள்ள முடியும். எனவே, நாணய நிலைமையைச் சரியானமுறையிற் தெரிந்துகொள்ளின், பணநிரம்பலில் ஏற் படுகின்ற மாற்றங்களை, பொதுமக்களிடமுள்ள இரண்டாந்தரத்திரவ இருப்புச் சொத்துக் களில் ஏற்படுகின்ற மாற்றங்களுடன் கூடவே சேர்த்துப் பார்த்தல் வேண்டும். கீழ்க்காணும் அட்டவணை II (இ) 4, 1964ஆம் ஆண்டிலிருந்து 1966ஆம் ஆண்டு வரைக்குமான, முதலாம், இரண்டாந்தரத்திரவ இருப்புச் சொத்துக்களின் விவரத்தைக் காட்டுகின்றது.

## அட்டவணை II (இ) 4

### வங்கிகளல்லாத தனியார் துறையின் மொத்த திரவ இருப்புச் சொத்துக்கள் 1964—66

| விபரம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | மொ. தே. உ. இன் சதவீதம் (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1964 | 1965 | 1966 | 1964 | 1965 | 1966 |
| **1. முதன்மைத் திரவ இருப்புச் சொத்துக்கள்** | | | | | | |
| (அ) நாணயத் தாள்களும் குத்திகளும் | 853·0 | 901·4 | 882·5 | 11·8 | 12·1 | 11·7 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் ... | 768·8 | 814·3 | 776·4 | 10·6 | 10·9 | 10·3 |
| மொத்தம் ... | 1621·8 | 1715·7 | 1658·9 | 22·4 | 23·1 | 22·0 |
| மாற்றம்-சதவீதப்படி ... | | +5·8 | —3·3 | | | |
| **2. இரண்டாந்தர திரவ இருப்புச் சொத்துக்கள்** | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 193·5 | 223·9 | 243·7 | 2·7 | 3·0 | 3·2 |
| (ஆ) தபாற்கந்தோர் சேமிப்பு வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 402·3 | 427·1 | 428·9* | 5·6 | 5·7 | 5·7 |
| (இ) இலங்கை சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 81·6 | 86·6 | 88·7* | 1·1 | 1·2 | 1·2 |
| (ஈ) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் ... | 327·0 | 343·5 | 341·2 | 4·5 | 4·6 | 4.5 |
| (உ) குடியிருப்போரின் அன்னிய மிச்சங்கள் ... | 12·0 | 11·5 | 7·3* | 0·2 | 0.2 | 0.1 |
| (ஊ) சேமிப்பு பத்திரங்கள் ... | 37·4 | 41·8 | 56·5 | 0·5 | 0.6 | 0.7 |
| (எ) இறைசேரி உண்டியல்கள் ... | 0·5 | 4·8 | 13·5 | ... | 0.1 | 0.2 |
| (ஏ) வரி ஒதுக்கு நிதிப்பத்திரங்கள் ... | 41·5 | 36·1 | 30·0 | 0·6 | 0.5 | 0.4 |
| (ஐ) அரசாங்க முறிகள் ... | 505·7 | 586·7 | 705·7 | 7·0 | 7.9 | 9.4 |
| மொத்தம் ... | 1601·5 | 1762·0 | 1915·5* | 22·2 | 23.7 | 25.4 |
| மாற்றம் சதவீதப்படி | | +10·0 | +8·7 | | | |
| **3. தனியார் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள்** | 3223·3 | 3477·7 | 3574·4* | 44·6 | 46.8 | 47.5 |
| மாற்றம்-சதவீதப்படி. | | +7·9 | +2·8 | | | |
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதி போன்ற அரசாங்க நிதித்தாபனங்கள் வசமுள்ள அரசாங்க முறிகளும், இறைசேரி உண்டியல்களும் மேலே சேர்க்கப்படவில்லை. | 1022·9 | 1229·9 | 1447·9 | 14·2 | 16·5 | 19.2 |

(அ) நடைமுறைச் சிணைக்கொள் விலைகளின்படி.
*தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1966ஆம் ஆண்டின்போது முதன்மைத் திரவ இருப்புச் சொத்துக்கள் 568 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றிருக்கையில், இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களிலே மேற்கூறிய வீழ்ச்சியை மேலதிகமாக ஈடுசெய்யுமளவிற்கு 1535 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பு ஏற்பட்டது. ஆகவே, மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள், 1965ஆம் ஆண்டு முடிவிற்குரிய 34777 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1966ஆம் ஆண்டு முடிவில் 35744 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்துள்ளன. இது, கடந்த ஆண்டிற்குரிய அதிகரிப்பாகிய 7·9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் 2·8 சதவீத அதிகரிப்பை மட்டுமே பிரதிபலிக்கின்றது. மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்களுக்கு இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் விகிதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 50·7 சதவீதத்திலிருந்து, இவ்வாண்டில் 53·6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. திரவ இருப்புச் சொத்துக்களினது அமைப்பின் அதிக முக்கியத்துவம் வாய்ந்த கூறுகள் சிலவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் முக்கிய அம்சங்களை விவரிப்பதற்கு, பின்வரும் பந்திகளில் முயலப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதான நாணய அமைப்பிலுள்ள உயர்ந்த இனத்தைச் சார்ந்த நாணயத்தாள்களின் அதிகரித்துவரும் விகித சமம், 1966ஆம் ஆண்டிலும் தொடர்ந்து காணக்கூடியதாக உள்ளது. கீழுள்ள அட்டவணை II (இ) 5இல் இருந்து காணக்கூடியவாறு, இவ்வாண்டின்போதான மொத்த நாணய வெளியீடு வீழ்ச்சியுற்ற போதிலும், 50 ரூபா நாணயத்தாள்களின் மொத்தப் பெறுமானம் சிறிதளவாக மாத்திரம் வீழ்ச்சியுற்றிருக்கையில், 100 ரூபா நாணயத்தாள்களின் மொத்தப் பெறுமானம் ஏறக்குறைய 320 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளது.

### அட்டவணை II (இ) 5

### நாணய அமைப்பு - 100, 50, 5 ரூபாய்களைக்கொண்ட இனங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | 100 ரூபா | 50 ரூபா | 10 ரூபா | 5 ரூபா | நாணய வெளியீடு* |
|---|---|---|---|---|---|
| 1960 திசெம்பர் ... | 148·4 | 148·4 | 237·6 | 40·1 | 644·6 |
| 1961 திசெம்பர் ... | 211·9 | 180·3 | 254·6 | 42·1 | 763·8 |
| 1962 திசெம்பர் ... | 238·2 | 186·8 | 241·9 | 42·8 | 789·4 |
| 1963 திசெம்பர் ... | 275·3 | 236·7 | 257·6 | 46·5 | 900·9 |
| 1964 மே ... | 298·0 | 246·5 | 257·4 | 47·8 | 937·6 |
| 1964 திசெம்பர் ... | 168·4 | 258·3 | 359·5 | 55·5 | 932·1 |
| 1965 திசெம்பர் ... | 239·9 | 297·8 | 319·7 | 50·5 | 1,002·8 |
| 1966 திசெம்பர் ... | 272·0 | 292·9 | 288·2 | 48·6 | 993·7 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

* 2, 1 ரூபா இனத்தாள்களும், சகல நாணயக்குத்திகளும் அடங்கும்.

ரூ. 100 நாணயத்தாள்களினது உடைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், வரி செலுத்துவதிலிருந்து தப்பித்துக்கொள்வதுபற்றி ஏற்பட்ட மாறுபாடும் மனப்பாங்குகளுடன் ஓரளவிலாவது சம்பந்தமுள்ளதாக வேண்டுமென, இதற்கு முந்திய ஆண்டு அறிக்கைகளிற் குறிப்பாகக் கூறப்பட்டிருந்தது. எனவே, 1964ஆம் ஆண்டில் இவ்வுடைமைகளில் ஏற்பட்ட கணிசமான அளவு குறைவிற்கு, ''வரியிறுப்பிலிருந்து தப்புவதற்கெதிராகவும், வெளிப்படுத்தப்படாத இருப்புச் சொத்துக்களை உயர்ந்த மதிப்பு இன நாணயத் தாள்கள் வடிவத்தில் பதுக்கிவைப்பதற்கெதிராகவும் எடுக்கப்படவிருந்த நடவடிக்கை பற்றிய எதிர்பார்த்தல்கள்,'' காரணமாகக் கூறப்பட்டது. ரூபா. 100 இன நாணயத்தாள்களை உடைமைகளாக மீண்டும் உயர்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு, 1966ஆம் ஆண்டில் மேற்கூறிய எதிர்பார்த்தல்கள் காரணமாக ஏற்பட்ட பயங்கள் தணிந்தமை, காரணமாகலாம். ரூபா. 100 நாணயத்தாள்களின் அளவு, ஏறக்குறைய 1963ஆம் ஆண்டிலிருந்த அதே மட்டத்தை, 1966ஆம் ஆண்டிலும் அடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கீழ்வரும் அட்டவணை II (இ) 6இல், வர்த்தக வங்கிகளிடமுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள் (தவணை, சேமிப்பு வைப்புக்களுடன்) பிரதான உடைமையாளர்களினது தொகுதிகளின்படி பாகுபடுத்தப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவ்வட்டவணையில் காணப்படும் தரவுகள், வங்கிவைப்புக்கள், முற்பணங்கள் சம்பந்தமான மத்திய வங்கியின் அரையாண்டு அளவைகளிலிருந்து பெறப்பட்டவையாகும்.

## அட்டவணை II (இ) 6

### வைப்புக்களின் உடைமையாளர்கள்

(காலமுடிவில் உள்ளபடி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நிதிநிலையங்கள்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 41·1 | 5·7 | 71·6 | 22·0 | 8·2 | 4·2 | 120·9 | 9·7 |
| திசெம்பர் 1965 ... | 45·4 | 5·9 | 69·0 | 21·3 | 7·7 | 3·4 | 122·1 | 9·3 |
| திசெம்பர் 1966 ... | 45·0 | 6·1 | 55·3 | 17·5 | 9·7 | 4·0 | 110·0 | 8·5 |
| **பெருந்தோட்டங்கள்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 68·4 | 9·4 | 31·3 | 9·6 | 0·4 | 0·2 | 100·1 | 8·0 |
| திசெம்பர் 1965 ... | 78·2 | 10·2 | 34·6 | 10·7 | 0·3 | 0·1 | 113·0 | 8·6 |
| திசெம்பர் 1966 ... | 59·7 | 8·1 | 38·8 | 12·3 | ... | ... | 98·5 | 7·6 |
| **வர்த்தகம்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 166·1 | 22·8 | 37·6 | 11·6 | 3·9 | 2·0 | 207·5 | 16·7 |
| திசெம்பர் 1965 ... | 158·8 | 20·7 | 54·2 | 16·7 | 3·2 | 1·4 | 216·2 | 16·5 |
| திசெம்பர் 1966 ... | 168·9 | 23·0 | 51·0 | 16·1 | 4·0 | 1·6 | 223·9 | 17·3 |
| **ஏனைய வியாபாரம்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 76·5 | 10·5 | 54·6 | 16·8 | 1·5 | 0·8 | 132·7 | 10·7 |
| திசெம்பர் 1965 ... | 104·5 | 13·7 | 46·5 | 14·3 | 2·4 | 1·1 | 153·4 | 11·7 |
| திசெம்பர் 1966 ... | 82·6 | 11·3 | 32·6 | 10·3 | 2·8 | 1·1 | 118·0 | 9·1 |
| **உள்ளூர் ஆட்சிச்சபைகள்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 26·8 | 3·7 | 27·2 | 8·4 | 0·2 | 0·1 | 54·2 | 4·3 |
| திசெம்பர் 1965 ... | 17·5 | 2·3 | 25·0 | 7·7 | 0·2 | 0·1 | 42·7 | 3·2 |
| திசெம்பர் 1966 ... | 22·9 | 3·1 | 15·6 | 4·9 | 0·6 | 0·2 | 39·1 | 3·0 |
| **வியாபாரத் தொடர்பற்ற நிலையங்கள்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 74·8 | 10·3 | 22·5 | 6·9 | 3·4 | 1·8 | 100·7 | 8·1 |
| திசெம்பர் 1965 ... | 52·3 | 6·8 | 19·6 | 6·0 | 4·5 | 2·0 | 76·4 | 5·8 |
| திசெம்பர் 1966 ... | 55·6 | 7·6 | 34·7 | 11·0 | 4·5 | 1·8 | 94·8 | 7·3 |
| **தனியாட்கள்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 273·3 | 37·6 | 80·4 | 24·7 | 176·0 | 90·9 | 529·7 | 42·5 |
| திசெம்பர் 1965 ... | 308·7 | 40·3 | 75·6 | 23·3 | 205·9 | 91·8 | 590·3 | 44·9 |
| திசெம்பர் 1966 ... | 299·0 | 40·7 | 88·6 | 28·0 | 222·2 | 91·1 | 609·8 | 47·1 |
| **மொத்தம்** | | | | | | | | |
| திசெம்பர் 1964 ... | 727·0 | 100·0 | 325·1 | 100·0 | 193·6 | 100·0 | 1245·8 | 100·0 |
| திசெம்பர் 1965 ... | 765·3 | 100·0 | 324·5 | 100·0 | 224·8 | 100·0 | 1314·1 | 100·0 |
| திசெம்பர் 1966 ... | 733·7 | 100·0 | 316·6 | 100·0 | 243·8 | 100·0 | 1294·1 | 100·0 |

தனியார்துறையிலுள்ள தனியாட்களினதும், ''ஏனைய வியாபாரம்'' என்ற பகுப்பைச் சேர்ந்த நிலையங்களினதும் கேள்வி வைப்புக்கள், இவ்வாண்டின்போது, மொத்தக் கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் போலவே ஒரு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. பெருந்தோட்டங்களினது கேள்வி வைப்புக்களும், கடந்த ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சியைத் தொடர்ந்து, இவ்வாண்டின்போது குறைந்தன. இம்மாற்றம் அநேகமாக, ஏனைய காரணிகளுள், 1965ஆம் ஆண்டில் அவற்றை அனுப்புவதன் மீதான தற்காலிகத்தடை காரணமாக தடைப்பட்டு நின்றனவாகிய, இலாபங்களினதும் பங்கிலாபங்களினதும் 1966ஆம் ஆண்டின் அதிகரித்த பணவனுப்பல்களினால் ஏற்பட்டிருக்கலாம். வர்த்தக நிலையங்களினது கேள்வி வைப்புக்களின் அதிகரிப்பினை நுகர்ச்சிப் பொருட்கள் பலவற்றிற்கிருந்த நிரம்பல் கேள்வி நிலைகளின் சந்தர்ப்பத்தில், மொத்த வியாபாரத்தினாலும், சில்லறை வியாபாரத்தினாலும் உள்ளூர் தயாரிப்பாளர்களினாலும் பெறப்பட்ட கணிசமான அளவு இலாபங்களால் ஓரளவு விளக்கலாம்.

இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் இயக்கத்தில் ஊக்கமளிக்கத்தக்க அம்சம், வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பாகும். இவ்வைப்புக்களிற் பெரும்பான்மையான பங்கு, தனியாட்களுடையதாகும். வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார்துறையில் மொத்தச் சேமிப்புவைப்புக்கள், இவ்வாண்டின்போது **198** இலட்சம் ரூபாய்களாக அதிகரித்து, **1966**ஆம் ஆண்டின் முடிவில் **2437** இலட்சம் ரூபாய்களைக் கொண்டவொரு மட்டத்தையடைந்தன. ஏறக்குறைய இவ்வதிகரிப்பு முழுவதும், தனியாட்களினது சேமிப்பு வைப்புக்களிலேயே ஏற்பட்டிருந்தது.

தவணை வைப்புக்கள், கேள்வி வைப்புக்களின் போக்கிற்கு முரணான போக்கினைக் காட்டின. வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார்துறையின் தவணை வைப்புக்கள், **1965**ஆம் ஆண்டு முடிவிற்குரிய **3245** இலட்சம் ரூபாய்களிலிருந்து, **1966**ஆம் ஆண்டு முடிவில் **3166** இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. இவ் வீழ்ச்சி, தாபன உடைமையாளர்களின் அநேகமான பகுப்புக்களது வைப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், தனியாட்களின் வைப்புக்கள் (மொத்த வைப்புக்களில் இவை சிறிதளவாகிய ஒரு பகுதியை மட்டுமே கொண்டுள்ளன) **130** இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. அட்டவணை **II** (இ) **6**இல் காட்டப்பட்டுள்ளதான, தனியார்துறையின் வேறுபட்ட பகுப்புக்களிலுள்ள உடைமையாளர்களின் வைப்புக்களைவிட, அரசாங்கமும் வர்த்தக வங்கிகளிடம் தவணை வைப்புக்களைக் கொண்டுள்ளது. இவ்வைப்புக்களின் அளவும், **1966**ஆம் ஆண்டில் **217**. இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமும், இலங்கைச் சேமிப்பு வங்கியிடமும் உள்ள சேமிப்பு வைப்புக்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள், அண்மை ஆண்டுகளில் நிதானமாக அதிகரித்து வந்து, **1965**ஆம் ஆண்டு முடிவிற்குரிய **4271** இலட்சம் ரூபாய்களிலிருந்து இவ்வாண்டில் ஆக **18** இலட்சம் ரூபாய்களாலான அதிகரிப்பை மட்டுமே பதிவுசெய்தன. இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள், **1965**ஆம் ஆண்டிற்குரிய மட்டமாகிய **866** இலட்சம் ரூபாய்களிலிருந்து, இவ்வாண்டில் **21** இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டின.

தனியார்துறை கொண்டுள்ள அரசாங்க முறிகளில் ஏற்பட்ட விரிவு, இவ்வாண்டின் போதான அத்துறையின் இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பில் மிகப்பெரிய ஒரு கூறாக அமைந்திருந்தது. இவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு, இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் மொத்த அதிகரிப்பாகிய **1569** இலட்சம் ரூபாய்களில், **1190** இலட்சம் ரூபாய்களாக அமைந்துள்ளது. இவ்வதிகரிப்பில் தனியாட்களால் வைத்திருக்கப்பட்ட அரசாங்க முறிகள், ஆக **145** இலட்சம் ரூபாய்களால் மட்டுமே உள்ளன. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளவை **473** இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இத்துடன், நம்பிக்கை, உபகார, இளைப்பாறற் சம்பள, சேமநிதிகள் (ஊழியர் சேமநிதியைத் தவிர்த்து) ஆகியன கொண்டுள்ளவை, **491** இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

மீளப்பார்வையிடும் ஆண்டின்போது முதன்மைத் திரவ இருப்புச் சொத்துக்களின் அமைப்பில் அடிப்படையான மாற்றமெதுவும் ஏற்பட்டிருக்கவில்லையெனினும், தனியார் துறையானது, இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் வடிவத்தில் வைத்திருந்த மொத்த நிதி இருப்புச் சொத்துக்களின் விகித சமத்தில், குறிப்பிடத்தக்கவோர் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது என்பது, மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆய்விலிருந்து காணக் கூடியதாகவுள்ளது.

## 1. (இ) அரசாங்க முறிகள்

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, தனியார் துறையிலுள்ள பல்வேறு தொகுதி உடைமையாளர்கள் வைத்திருக்கும் அரசாங்க முறிகளைத் தவிர, பெருமளவினதான அரசாங்க முறிகள், வங்கித்தொழில்முறையினூலும், அத்துடன் பல்வித அரசாங்க, அரசாங்கச் சார்புள்ள முகவர்களாலும், தாபனங்களாலும் உடைமைகளாக வைத்திருக் கப்படுகின்றன. கீழுள்ள அட்டவணை II (இ) 7இல் அரசாங்க முறிகளின் உடைமையா ளர்கள்பற்றிய முழுமையான ஒரு பாகுபாடு தரப்பட்டுள்ளது. 1964ஆம் ஆண்டிலிருந்து 1966ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு தொகுதிக்குமுரிய உரிமையாளரினது உடைமைகளின் பெறுமானமும், அத்துடன் இவ்வுடைமைகளில் 1965ஆம் ஆண்டிலும், 1966ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட மாற்றங்களும், இவ்வட்டவணையிலே தரப்பட்டுள்ளன.

### அட்டவணை II (இ) 7

### அரசாங்க முறிகளின் உடைமையாளர்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1964 | 1965 | 1966 | மாற்றம் 1964/65 | மாற்றம் 1965/66 |
|---|---|---|---|---|---|
| 1. வங்கித் தொழில் முறை* ... | 322·5 | 324·9 | 324·5 | + 2·4 | — 0·4 |
| 2. அரசாங்க, இணைக்கள மற்றும் ஏனைய அரசகரும நிதிகள் ... | 115·4 | 120·9 | 124·9 | + 5·5 | + 4·0 |
| 3. தேசிய வீடமைப்பும் பொதுப்படு கடன் ஆழ் நிதிகளும் ... | 269·0 | 331·3 | 429·2 | + 62·3 | + 97·9 |
| 4. அரசாங்கச் சார்புடைய சேமிப்பு ... | 443·6 | 482·4 | 545·1 | + 38·8 | + 62·7 |
| 5. ஊழியர் சேமநிதி ... | 303·5 | 373·4 | 455·3 | + 69·9 | + 81·9 |
| 6. நம்பிக்கைச் சொத்துக்களும் உபகார, இளைப்பாறற் சம்பள சேம நிதிகளும் ... | 256·5 | 289·0 | 338·1 | + 32·5 | + 49·1 |
| 7. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 55·0 | 97·0 | 144·3 | + 42·0 | + 47·3 |
| 8. காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 129·2 | 133·9 | 140·2 | + 4·7 | + 6·3 |
| 9. தனியாட்கள் ... | 18·4 | 22·3 | 36·8 | + 3·9 | + 14·5 |
| 10. ஏனையவை ... | 46·5 | 44·6 | 46·3 | — 1·9 | + 1·7 |
| மொத்தம் ... | 1,959·6 | 2,219·6 | 2,584·6 | +260·0 | +365·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* இவ்விடயம் மத்திய வங்கியின் வசமுள்ள அரசாங்க முறிகளை உள்ளடக்கும். இவை, 1963ம் ஆண்டு 115 இலட்சம் ரூபாய்களாகவும்; 1964ம், 65ம், 66ம் ஆண்டுகளில் 80 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின.

1966ஆம் ஆண்டின்போது அரசாங்க முறிகளில் ஏற்பட்ட அதிகரிப்பில் மிகப் பெரிய பங்கினை தேசிய வீடமைப்பு நிதியும், பொதுப்படுகடன் ஆழ் நிதியும் எடுத்துக்கொண்டன. இவற்றின் உடைமைகள் 979 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. ஊழியர் சேமநிதி வைத்திருக்கும் அரசாங்க முறிகளின் உடைமைகள், கடந்த ஆண்டிற்குரிய அதிகரிப்பாகிய 699 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு 819 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1966ஆம் ஆண்டின் இறுதியில், அரசாங்க முறிகளின் மிகப்பெரிய தனித்த தாபன உடைமையாளராக, ஊழியர் சேமநிதி விளங்கியது. இவ்வாண்டின் போது, அரசாங்கச் சார்புள்ள சேமிப்பு நிலையங்கள் தங்களது ஆவணங்களாகிய அரசாங்க முறிகளை 627 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன. ஊழியர் சேமநிதி தவிர்ந்த, நம்பிக்கை, உபகார, இளைப்பாறற் சம்பள, சேம நிதிகள், அவற்றின் அரசாங்க முறி உடைமைகளை, 491 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன.

எனவே, அரசாங்க முறிகளுக்கான சந்தையில் தாபன முதலீட்டக் காரர்கள் முந்திய ஆண்டுகளைப்போலவே தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தினூர்களென்பது புலப்படும். தனியாட்களின் அரசாங்க முறிகளினது உடைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஆக 145

இலட்சம் ரூபாய்களாக மட்டுமே அமைந்துள்ளது. அரசாங்க முறிகளின் மொத்த அதிகரிப் பாகிய 3650 இலட்சம் ரூபாய்களில் இது ஒரு சிறிய பகுதியாக இருந்தபோதும், இவ்விட யத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம், கடந்த சில ஆண்டுகளிலேற்பட்டவற்றைவிட 1966ஆம் ஆண்டில் மிகக்கூடியதாக உள்ளது. இது, அரசாங்க முறிகளில் முதலீடு செய்வதற்கு அளிக்கப்பட்ட கணிசமான அளவு வரி நிவாரணங்களின் காரணமாக ஏற்பட்டதென ஊகிக்கலாம்.

**1 (ஈ) சுழல்வு வீதங்கள்**

வர்த்தக வங்கிகளிடமுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்களினது மாதாந்தச் சராசரி மட்டம், 1966ஆம் ஆண்டில், கடந்த ஆண்டிலிருந்ததைவிட உயர்ந்திருந்தது. இது, 8057 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1965ஆம் ஆண்டின் மாதாந்தச் சராசரியை விட 6·8 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. எனினும், இவ்வைப்புக்களின் மாதாந்தச் சராசரிச் சுழல்வு வீதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 1·79 இலிருந்து, 1966ஆம் ஆண்டில் 1·64இற்கு 8·4 சதவீதங்களால் வீழ்ச்சியுற்றுள்ளது. பணநிரம்பலினது வைப்புக் கூறின் சுழல்வு வீதத்திலேற்பட்ட இம்மாற்றம், அதே திசையில் பணத்தின் வருமான விரைவு வீதத்தில் ஏற்பட்டவொரு மாற்றத்திலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. பிந்தியது, மொத்தப் பணநிரம்பலின் சராசரி மட்டத்திற்கு நடைமுறைச்சினைக்கொள்விலைகளின் படியான தேசிய வருமானத்தினது விகிதத்தின்படி அளவிடுகையில், 1965ஆம் ஆண்டிற் குரிய 4·51இலிருந்து, 1966ஆம் ஆண்டு 4·46இற்கு குறைந்துள்ளது.

வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்களையும், சேமிப்பு வைப்புக்களையும் பொறுத் தமட்டில், முற்கூறிய வைப்புக்களின் சுழல்வு வீதத்தில் ஒரு வீழ்ச்சியேற்பட்டிருக்கையில், பின்னர் கூறிய வைப்புக்கள் 1965ஆம் ஆண்டிற்குரிய மட்டத்தில் நிலைபெறுக நின்றன. தவணை வைப்புக்களின் மாதாந்தச் சராசரி மட்டமானது, 1965ஆம் ஆண்டிலிருந்ததான 3297 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1966ஆம் ஆண்டில் 3594 இலட்சம் ரூபாய்களாக அமைந்துள்ளது இதன் மாதாந்தச் சராசரிச் சுழல்வு வீதம், 0·24 இலிருந்து 0·21இற்கு 12·5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றுள்ளது. வர்த்தக வங்கிகளிட முள்ள சேமிப்பு வைப்புக்களின் மாதாந்தச் சராசரி மட்டம் 2390 இலட்சம் ரூபாய்களாக அமைந்துள்ளது. இம்மட்டம் 1965ஆம் ஆண்டில் 14·7 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. ஆனால், வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்களின் மாதாந்தச் சராசரிச் சுழல்வு வீதம் 0·08இல் மாற்றமுறாது இருந்தது. வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக் களினதும், சேமிப்பு வைப்புக்களினதும் இணைந்த சுழல்வு வீதமானது, 6·2 சதவீதத் தால் வீழ்ச்சியுற்றுள்ளது.

கடந்த ஆண்டில் வீழ்ச்சியுற்றிருந்தனவான, தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியின தும், இலங்கைச் சேமிப்பு வங்கியினதும் சேமிப்பு வைப்புக்களின் சுழல்வு வீதங்கள், 1966ஆம் ஆண்டில் ஓர் அதிகரிப்பைப் பதிவு செய்தன. தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமுள்ள வைப்புக்களின் சராசரி மாதாந்த மட்டம், 4273 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1965ஆம் ஆண்டிலிருந்ததைவிடக் கணிசமானளவு உயர்ந்ததாக உள்ளது. அவ்வைப்புக்களின் சுழல்வு வீதம், ·019இலிருந்து ·020இற்கு ஓரளவு அதிகரித் துள்ளது. 1966ஆம் ஆண்டில், இலங்கைச் சேமிப்பு வங்கியிடமிருந்த வைப்புக்களின் சராசரி மட்டம் 872 இலட்சம் ரூபாய்களாகும். இதனை, 1965ஆம் ஆண்டிற்குரிய மட்டமாகிய 829 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடலாம். இவ்வைப்புக்களின் சுழல்வு வீதம் ·014இலிருந்து ·017இற்கு 21·4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**1. (உ) வட்டி வீதங்கள்**

வங்கி வீதம், 1965ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதியில் குறித்தபடி, 5 சதவீதத்தில் இருந்தது.

வர்த்தக வங்கிகள் 1966ஆம் ஆண்டில் விதித்த ஆகக்குறைந்த, ஆகக்கூடிய வீதங்கள், கடந்த ஆண்டில் வங்கி வீதம் உயர்த்தப்பட்டபின்பு நடைமுறைக்கு வந்த வீதங்களிலிருந்து மாற்றமுறாதிருந்தன. அரசாங்கப் பிணைகளினால் பெறப்பட்ட கடன்களின் பேரிலான ஆகக்குறைந்த வீதம் 5½ சதவீதமாகவும், ஆகக்கூடிய வீதம் 7 சதவீதமாகவும் இருந்தன. வர்த்தகக் கையிருப்பினால் பெறப்பட்ட கடன்களின் ஆகக்குறைந்த வீதம் 6 சதவீதமாக இருக்கும்போது, ஆகக்கூடிய வீதம் 9 சதவீதமாக இருந்தது. கூட்டுநிலையப்பங்குகளாலும், அசைவற்ற சொத்துக்களாலும் பெறப்பட்ட கடன்களின் ஆகக்குறைந்த வீதம் 7 சதவீதமாக இருக்கையில், ஆகக்கூடிய வீதம் முந்தியதுக்கு 9 சதவீதமாகவும், பிந்தியதுக்கு 9½ சதவீதமாகவும் இருந்தது. "ஏனைய" வகைப்பிணைகளின் எஞ்சிய பகுப்பினால் பெறப்பட்ட கடன்களுக்கான வீதங்கள், ஆகக்குறைந்த வீதமாகிய 5 சதவீதத்திற்கும், ஆகக்கூடிய வீதமாகிய 9 சதவீதத்திற்கும் மாறிக்கொண்டிருந்தன. பெறப்படா கடன்களுக்கான வீதங்கள் 7 சதவீதத்திற்கும் 9 சதவீதத்திற்கும் மாறிக் கொண்டிருந்தன. நடுத்தர, நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிதியிலிருந்து கொடுகடன் நிலையங்கள் பெற்ற மீள நிதியீட்டற் கடன்களின் பேரில் மத்திய வங்கி விதித்த வட்டி வீதங்கள், 1966ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 6ஆம் திகதி முதல், கைத்தொழிலினதும், விவசாயத்தினதும் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்காக 3 சதவீதத்திற்கும், வர்த்தகம், வணிகம் அல்லது வியாபாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்காக 5 சதவீதத்திற்கும், குறைக்கப்பட்டன. முற்கூறிய பகுப்புக் கடன்களைப் பொறுத்தமட்டில், இவ்வசதியினைப் பயன்படுத்திய கொடுகடன் நிலையங்கள், தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கியவையும், இவற்றின் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீள நிதியீட்டம் கோரியவையுமான கடன்களின் மீது ஆண்டிற்கு 6 சதவீதத்திற்குக் கூடிய வட்டியை விதிக்கமாட்டா என்ற நிபந்தனையின் பேரிலேயே, 3 சதவீத வீதமானது நடைமுறையிலிருக்கும். எனினும், தேயிலை இயந்திரங்களைக் கொள்வனவு செய்தற்கும், புதிய தேயிலைத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் இந்நிலையங்களால் வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தமட்டில் இக்கடன்களின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டியின் ஒரு பகுதியைத் தேயிலைக் கட்டுப்பாட்டாளர் பொறுக்குமிடத்து,[1] மீள நிதியீட்டற் கடன்களின் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 5 சதவீதமாக இருக்கும். ஆயின், இவ்வசதியைப் பயன்படுத்திய கொடுகடன் நிலையங்கள், தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு அவை வழங்கியவையும் இதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீளநிதியீட்டம் கோரியவையுமான கடன்களின் மீது ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கதிகமான வட்டியை இதன்பேரில் அறவிடாதிருத்தல் வேண்டும். 1966ஆம் ஆண்டில், நடுத்தரகால, நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிதியிலிருந்து மத்திய வங்கி வழங்கிய மொத்தக் கடன்கள், 26 இலட்சம் ரூபாய்களாக அமைந்தன.

இறைசேரி உண்டியல் வீதத்தில் 1966ஆம் ஆண்டிலே மாற்றமெதுவும் ஏற்படவில்லை. மாதாந்த வெளியீடுகளுக்கான நிறைகொடுத்த சராசரி வீதம், 1965ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் இருந்தது போலவே, தொடர்ந்தும் 3 சதவீதமாக இருந்தது. 20 ஆண்டுகளுக்கு மேலான முதிர்ச்சியையுடைய அரசாங்கக் கடன்களைப் பொறுத்தமட்டிலான வீதமும், 1966ஆம் ஆண்டில் 4½ சதவீதத்திலே மாற்றமுறாதிருந்தது.

## 2. வர்த்தக வங்கித் தொழில்முறை

தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், 1965ஆம் ஆண்டில் சிறிதளவாக அதிகரித்து, 1966ஆம் ஆண்டில் பெரிதளவினதாக அமைந்தது எனினும்,

---

1. தேயிலை இயந்திரங்களைக் கொள்வனவு செய்தற்கும், புதிய தேயிலைத் தொழிற்சாலைகளை அமைத்தற்குமாகக் கடன்பெற்றவர்களுக்கு, அக்கடன்களின்பேரில் செலுத்தும் வட்டியின் மீதான மான்யமளிக்கும் திட்டமொன்றின் கீழ், தேயிலைக் கட்டுப்பாட்டாளர், 1958ஆம் ஆண்டின் தேயிலை மான்ய அதிகாரச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட தேயிலை மான்ய நிதியிலிருந்து, தனியார் துறைபெற்ற அவ்வித கடன்களின் மீதான அரைப்பங்கு வட்டியையும், கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற கடன்களின்மீதான முழு வட்டியையும் பொறுப்பார்.

1966ஆம் ஆண்டின் 937 இலட்சம் ரூபாய்களைக்கொண்ட அதிகரிப்பு, 1965ஆம் ஆண்டில் அடையப்பட்ட 1369 இலட்சம் ரூபாய்களைக்கொண்ட உச்ச மட்டத்தின்கீழ் இருந்தது. 1966ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் ஆக்கத்திற்கான வளங்கள், முக்கியமாக அரசாங்கத் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்டவொரு சுருக்கத்திலிருந்தே ஏற்பட்டன. வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை நிலை, கடந்த ஆண்டிலிருந்ததைப் போலவே பொதுவாக உயர்வடைந்திருந்தது. ஆயினும், இவ்வாண்டின் இறுதி மாதத்தில் இது ஒரு வீழ்ச்சியைக் காட்டியது.

## 2 (அ) வங்கிக் கிளைகளின் அமைப்பு

வங்கி அலுவலகங்கள் அமைக்கப்பட்ட விதமும், 1962-1966 கால எல்லைக்குள் மொத்த வைப்புக்கள் இலங்கையர், பிரித்தானியர், இந்தியர், பாக்கிஸ்தானியர் வங்கிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதமும், கீழே அட்டவணை II (இ) 8இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை II (இ) 8

### வங்கி அலுவலகங்களினதும், வைப்புக்களினதும் பங்கீடு 1962—1966

| ஆண்டு | மொத்தம் | | | இலங்கையர் வங்கிகள் | | | பிரித்தானியர் வங்கிகள் | | | இந்திய, பாகிஸ்தானியர் வங்கிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | | தொகை பத்து இலட்ச ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்ச ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்ச ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்ச ரூபாய்கள் | % |
| 1962 | 73 | 1,182 | 100 | 57 | 683 | 58 | 12 | 429 | 36 | 4 | 70 | 6 |
| 1963 | 83 | 1,301 | 100 | 67 | 801 | 61 | 12 | 412 | 32 | 4 | 88 | 7 |
| 1964 | 88 | 1,447 | 100 | 72 | 943 | 65 | 12 | 415 | 29 | 4 | 90 | 6 |
| 1965 | 97 | 1,546 | 100 | 81 | 1,023 | 66 | 12 | 431 | 28 | 4 | 92 | 6 |
| 1966 | 105 | 1,502 | 100 | 89 | 1,003 | 67 | 12 | 419 | 28 | 4 | 80 | 5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

மீளப்பார்வையிடும் ஆண்டின்போது, மக்கள் வங்கியால் ஏழும், இலங்கை வங்கியால் ஒன்றுமாக எட்டு புதிய வங்கி அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இப்புதிய அலுவலகங்கள், ஹோமகம, கொழும்பிலுள்ள மெயின் ஸ்ரீற், கஹதகஸ்டிகிலிய,மாகோ, நாவலப்பிட்டியா, வரக்காபொல, களனி, பொரளை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. புதிய அலுவலகங்கள் எட்டினுள், ஆறு அலுவலகங்கள், இதற்குமுன் வங்கி வசதிகள் அற்றிருந்த இடங்களிலேயே திறக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள வங்கித்தொழில் அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை, 1962ஆம் ஆண்டின் இறுதியிலிருந்த 73 உடன் ஒப்பிடுகையில், 1966ஆம் ஆண்டின் இறுதியில் 105ஆக அதிகரித்துள்ளது. இந்த 105 கிளைகளுள், 16 அந்நிய முயற்சிகளுக்குச் சொந்தமாகவும், எஞ்சிய 89 இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் சொந்தமாகவும் உள்ளன.

## 2. (ஆ) வங்கிப் பொறுப்புக்களின் அமைப்பு

அட்டவணை II (இ) 9, 1965/1966 காலப்பகுதிக்கான வங்கி இருப்புச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் பங்கீட்டின் சுருக்கத்தைக் காட்டுகின்றது.

வர்த்தக வங்கிகளின் மொத்த இருப்புச் சொத்துக்கள் / பொறுப்புக்கள், 1965 திசெம்பர் 30ஆம் திகதியிலிருந்த 18144 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1966, திசெம்பர் 30ஆம் திகதியில் 18464 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. இது, 1965ஆம் ஆண்டிற் குரிய அதிகரிப்பாகிய 9·4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 1·8 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. வங்கிகளிடையிலான கடன்பாடுகளில் ஏற்பட்ட 412 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பும், செலவிறுத்த மூலதனத்திலும், ஒதுக்கு நிதிகளிலும் ஏற்பட்ட 160 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பும், ஏனைய பொறுப்புக்களில் ஏற்பட்ட 182 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பும், வைப்புக்களிலுண்டாகிய வீழ்ச்சியை மேலதிக மாக ஈடு செய்தபடியினுல் வர்த்தக வங்கிகளின் மொத்தவைப்புப் பொறுப்புக்களில் 441 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும்கூட, மேற் சொல்லப்பட்ட அதிகரிப்பு ஏற்பட்டது. மொத்தப் பொறுப்புக்களுக்கு மொத்த வைப்புக் களின் விகிதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 85·2 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டில் 81·3 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

இவ்வாண்டின்போது, வைப்புப் பொறுப்புக்களின் அமைப்பில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. 1965ஆம் ஆண்டில் மொத்த வைப்புக்களில் 11·1 சதவீதத்தைக் கொண்டிருந்ததான அரசாங்க வைப்புக்கள், தனியார் வைப்புக்களிலும் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும், கூட்டுறவு நிலையங்களினதும் வைப்புக்களேயும் உள்ளடக்கி) பார்க்கப் பெரியதொரு சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. வங்கிகளின் வைப்புப் பொறுப்புக் களின் 441 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்த வீழ்ச்சியில், 282 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி, அரசாங்க வைப்புக்களின், முக்கியமாகத் தவணை வைப்புக்களின் சுருக்கத்திஞல் ஏற்பட்டதாகும். இதன்பலஞக, மொத்த வைப்புக்களுக்கு அரசாங்க வைப்புக்களின் விகிதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 11·1 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டில் 9·6 சதவீதத்திற்குக் குறைவுற்றது. தனியார் வைப்புக்களில் ஏற்பட்ட 151 இலட்சம் ரூபாய்கள் கொண்ட சுருக்கமானது, கேள்வி வைப்புக்களிலேற்பட்ட 326 இலட்சம் ரூபாய்கள் கொண்ட சுருக்கத்தினதும், தவணை, சேமிப்பு வைப்புக்களி லேற்பட்ட 175 இலட்சம் ரூபாய்கொண்ட விரிவினதும், தேறிய விளைவாக அமைந்தது. மொத்த வைப்புப் பொறுப்புக்களுக்குக் கேள்வி வைப்புக்களின் விகிதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 60·7 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டில் 59·9 சதவீதத்திற்குச் சிறித ளவினதாக வீழ்ச்சியுற்றது. தனியார்துறையிலுள்ள வேறுபட்ட பகுப்பு உடைமையாளர் களிடையேயுள்ள வங்கி வைப்புக்களின் பங்கீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், அட்டவணை II (இ) 6இல் காட்டப்பட்டுள்ளன.

**2. (இ) வங்கி இருப்புச் சொத்துக்களின் அமைப்பு**

வர்த்தக வங்கிகளின் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பகுப்புக்களுக்குரிய இருப்புச் சொத்துக்களின் இயக்கங்கள், அட்டவணை II (இ) 9இல் காட்டப்பட்டுள்ளன.

ஆண்டு முடிவு நிலைகளில் இருந்து பார்வையிடும்போது, 1966ஆம் ஆண்டின் வங்கி இருப்புச் சொத்துக்களின் திரவத்தன்மை அமைப்பில், வெளிப்படையானவொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. கேள்வி வைப்புக்களுக்குத் திரவ இருப்புச் சொத்துக்களின் விகிதம், 1965ஆம் ஆண்டு முடிவில் 62·8 சதவீதமாக இருந்து, 1966ஆம் ஆண்டு முடிவில் 55·2 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றுள்ளது. இதைப் போன்றே, மொத்த வைப்புக்களுக்குத் திரவ இருப்புச் சொத்துக்களின் விகிதமும், 38·2 சதவீதத்திலிருந்து 33 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இது, முக்கியமாக, கையிருப்பிலுள்ள பணத்தினதும், மத் திய வங்கியிடமுள்ள வைப்புக்களினதும் சுருக்கத்தாலும், கழிவுபெற்ற உண்டியல்களின் சுருக்கத்தாலும், அத்துடன் சிறிதளவில் இறைசேரி உண்டியல் உடைமைகளினது வீழ்ச்சி

## அட்டவணை II (இ) 9

### வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியனவற்றின் பங்கீடுகள்

(மாத எண்தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | கால முடிவில் திசெம் 1965 | கால முடிவில் திசெம் 1966 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் (நியதிச்சட்ட முறையான ஒதுக்குப் பணமும்உட்பட) மத்திய வங்கியில் வைக்கப்பட்ட வைப்புக்களும் ... | 149 | 148 | 139 | 119 | 116 | 132 | 148 | 186 | 164 | 182 | 224 | 233 | 233 | 192 |
| அந்நிய நிலுவைகள் ... | 112 | 116 | 72 | 50 | 52 | 58 | 54 | 55 | 44 | 49 | 55 | 62 | 45 | 60 |
| இறைசேரி உண்டியல்கள் ... | 51 | 39 | 34 | 16 | 24 | 28 | 51 | 89 | 128 | 73 | 89 | 124 | 127 | 116 |
| கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள் ... | 94 | 93 | 100 | 116 | 119 | 115 | 122 | 136 | 114 | 126 | 173 | 175 | 185 | 128 |
| மொத்த திரவச் சொத்துக்கள் ... | 406 | 396 | 345 | 301 | 311 | 333 | 375 | 466 | 450 | 430 | 541 | 594 | 590 | 496 |
| மொத்த முதலீடுகள் (1) ... | 245 | 291 | 308 | 296 | 285 | 284 | 290 | 303 | 313 | 330 | 329 | 330 | 329 | 325 |
| மொத்தக்கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் | 244 | 273 | 340 | 363 | 395 | 430 | 435 | 477 | 495 | 633 | 669 | 682 | 665 | 730 |
| கேள்வி வைப்புக்கள் (2) ... | 675 | 731 | 721 | 661 | 655 | 657 | 677 | 829 | 789 | 853 | 917 | 949 | 939 | 898 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் ... | 190 | 206 | 240 | 263 | 300 | 340 | 359 | 380 | 460 | 535 | 572 | 631 | 607 | 603 |
| மொத்த வைப்புக்கள் ... | 869 | 941 | 965 | 926 | 955 | 998 | 1,036 | 1,209 | 1,250 | 1,389 | 1,490 | 1,580 | 1,546 | 1,502 |
| விகிதம் | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்விவைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் ... | 22·1 | 20·2 | 19·3 | 18·0 | 17·7 | 20·1 | 21·9 | 22·4 | 20·8 | 21·3 | 24·4 | 24·5 | 24·8 | 21·4 |
| மொத்தவைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் ... | 17·1 | 15·7 | 14·4 | 12·9 | 12·1 | 13·2 | 14·3 | 15·4 | 13·1 | 13·1 | 15·0 | 14·7 | 15·1 | 12·8 |
| மொத்தவைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின்விகிதம் ... | 12·9 | 12·3 | 7·4 | 5·4 | 5·4 | 5·8 | 5·2 | 4·5 | 3·5 | 3·5 | 3·7 | 3·9 | 2·9 | 4·0 |
| மொத்தவைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம் ... | 5·9 | 4·1 | 3·5 | 1·7 | 2·5 | 2·8 | 4·9 | 7·4 | 10·2 | 5·3 | 6·0 | 7·8 | 8·2 | 7·7 |
| மொத்தவைப்புக்களுக்குக் கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் ... | 10·8 | 9·9 | 10·3 | 12·5 | 12·5 | 11·5 | 11·8 | 11·2 | 9·1 | 9·1 | 11·6 | 11·1 | 12·0 | 8·5 |
| கேள்விவைப்புக்களுக்குத் திரவச்சொத்துக்களின் விகிதம் | 60·1 | 54·2 | 47·9 | 45·5 | 47·5 | 50·7 | 55·4 | 56·2 | 57·0 | 50·4 | 59·0 | 62·6 | 62·8 | 55·2 |
| மொத்தவைப்புக்களுக்குத் திரவச்சொத்துக்களின்விகிதம் ... | 46·7 | 42·1 | 35·8 | 32·5 | 32·6 | 33·4 | 36·2 | 38·5 | 36·0 | 31·0 | 36·3 | 37·6 | 38·2 | 33·0 |
| மொத்தவைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் ... | 28·2 | 30·9 | 31·7 | 32·0 | 29·8 | 28·5 | 28·0 | 25·1 | 25·0 | 23·8 | 22·1 | 20·9 | 21·3 | 21·6 |
| மொத்தவைப்புக்களுக்குக் கடன்கள் மேலதிகப் பற்றுக்களின் விகிதம் ... | 28·1 | 29·0 | 35·2 | 39·2 | 41·4 | 43·1 | 42·0 | 39·4 | 39·6 | 45·6 | 44·9 | 43·2 | 43·0 | 48·6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(1) அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மத்திய வங்கி வெளியீடுகளும்.

(2) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

யாலும் ஏற்பட்டது. குறைந்த திரவத்தன்மையுள்ள இருப்புச் சொத்துக்களுள், வெளி நின்ற கடன்களும், மேலதிகப்பற்றுக்களும் 650 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இதனுல், மொத்த வைப்புக்களுக்கு இவற்றின் விகிதம், 1965ஆம் ஆண்டு முடிவிற்குரிய 43·0 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டு முடிவில் 48·6 சதவீதத் திற்கு உயர்வடைந்துள்ளது.

எனினும், மாதச்சராசரிகளின் ஒப்புமை, வங்கி இருப்புச் சொத்துக்களினது திரவத் தன்மை அமைப்பில் அதே மாற்றத்தைக் காட்டவில்லை. 1966ஆம் ஆண்டில், வெவ்வேறு வகைகளின்படியான திரவ இருப்புச் சொத்துக்களின் சராசரி மாதாந்த உடைமைகள், ஏறக்குறைய கடந்த ஆண்டிலிருந்தமையைப் போலவே உள்ளன. 1966ஆம் ஆண்டில் கேள்வி வைப்புக்களுக்குச் சகல திரவ இருப்புச் சொத்துக்களினதும் மாதாந்தச் சராசரி விகிதம் 62·6 சதவீதமாக அமைந்து, உண்மையிலேயே கடந்த ஆண்டிற்குரிய தொடர்பான தொகையாகிய 59·0 சதவீதத்தைவிட, ஓரளவு உயர்வாக உள்ளது. திசெம்பர் மாதத்தில் மட்டுமே திரவத்தன்மையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. ஆகவே, ஆண்டு முழுவதற்குமாக எடுக்கையில் வங்கிகளின் திரவத்தன்மை நிலே, ஏறக்குறைய 1965ஆம் ஆண்டினதைப்போலவே இருந்தது.

**2. (ஈ) நிதிகளின் மூலங்களும், அவற்றின் பயன்பாடுகளும்**

வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட கணிசமான அளவு வீழ்ச்சியால் உண்டாகியதான பணநிரம்பலின் சுருக்கத்தாக்க விளேவினே, வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தொழிற்பாடுகள் குறைவுபடுத்தியுள்ளன என்பதுபற்றி ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. தனியார்துறைக்கு வர்த்தக வங்கித் தொழில்முறையினுல் அளிக்கப்பட்ட கடன்களினதும், முற்பணங்களினதும் மொத்தத் தொகையானது, 1965ஆம் ஆண்டிற்குரிய அதிகரிப்பாகிய 42 இலட்சம் ரூபாய்களுக்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 937 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளது. வர்த்தக வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பு, கடந்த ஆண்டிற்குரியதுடன் ஒப்பிடுகையில் உயர்வாக இருந்தது என்பதனுல் மட்டுமல்லாது, பொதுமக்கள் வைத்திருந்த மொத்த வைப்புக்களில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும் கூட, இக்கொடுகடன் அதிகரிப்பு உண்டாகியது என்பதனுலேயே, இது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பொதுமக்கள் வைத்திருக்கும் வைப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டிராதவிடத்து, கொடுகடனே விரிவாக்குதல், ஏற்கெனவே திரவ வடிவில் உள்ள வளங்களேத் திருப்புவதனுல், அல்லது மத்திய வங்கி போன்ற ஏனைய மூலத்திலிருந்து கடன்படுவதனுல், சாத்தியமாகிறது. 1966ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகள் கொடுகடன் ஆக்கத்திற்கு வளங்களேத் திரட்டிய வழிகளின் பகுப்பிலிருந்து, இது தெளிவாகப் புலப்படுகின்றது.

வர்த்தக வங்கிகளின் வளங்களில் அதிகரிப்பினேயேற்படுத்துதற்கான நிதிகளின் மிகமுக்கிய தனி மூலமானது அரசாங்கத்துறையென்பதை அட்டவணே II (இ) 10 காட்டுகின்றது. வர்த்தக வங்கிகள், தங்களது அரசாங்கப்பத்திர உடைமைகளேக் குறைவாக்கின. அத்துடன், அரசாங்கத்துக்கான அவற்றின் குறுகியகாலத்தவணேக் கடன்களேயும், குறைத்துக் கொண்டன. அரசாங்கப் பத்திர உடைமைகள், 1965ஆம் ஆண்டிற்குரிய 328 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அதிகரிப்பிற்கெதிராக, இவ்வாண்டில் 147 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. அரசாங்கத்துக்கான குறுகிய காலத்தவணேக் கொடுகடன், கடந்த ஆண்டிற்குரிய 595 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பிற்கெதிராக, இவ்வாண்டில் 496 இலட்சம் ரூபாய்களால் குறைக்கப்பட்டது. அரசாங்கத்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் போக்கில் ஏற்பட்ட இத்திருப்பம், வர்த்தக வங்கிகளது வளப்பயன்பாட்டு அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருவதைவிட, வேறு விளேவுகளேயும் கொண்டுவந்தது. மத்திய வங்கி அதன் அரசாங்கப்பத்திர உடைமைகளே அதிகரிப்பதாலும், கூடியதொகை

யான் தற்காலிகக் கடன்களை அளிப்பதாலும் ஏற்படும் அரசாங்கத்துறைக்கான மத்திய வங்கிக் கொடுகடனின் விரிவினை, இது அவசியமாக்கியது. பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் என்ற பிரிவில், இதைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

1966ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளது வளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான ஏனையமூலம், மத்திய வங்கியேயாகும். வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு, 364 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. வர்த்தக வங்கி களினது உள்நாட்டுப் பண விடயங்களின் 401 இலட்சம் ரூபாய்கள்கொண்டவொரு குறைப்பினால், வர்த்தக வங்கி வளங்களில் மேலுமோர் அதிகரிப்பு ஏற்பட்டது.

**அட்டவணை II (இ) 10**

**வங்கிகளினது வளங்களின் வருடாந்த மாற்றங்களும், அவற்றின் பயன்பாடுகளும் 1963 - 1966**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | | | | |
| 1. **அரசாங்கத்துறை** ... | 14·8 | 2·9 | 11·8 | 64·3 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... | — | — | — | — |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் குறைப்பு ... | 5·5 | — | — | 14·7 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 9·3 | 2·9 | 11·8 | — |
| அரசாங்கத்துக்கான குறுகிய காலத்தவணைக் கொடுகடனின் வீழ்ச்சி ... | — | — | — | 49·6 |
| 2. **மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பு** ... | 37·9 | — | — | 36·4 |
| 3. **உள்நாட்டுத் தனியார்துறை** ... | 115·3 | 154·9 | 148·8 | 34·2 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 109·9 | 143·8 | 85·0 | — |
| ஒதுக்குகள், செலவிறுத்த மூலதனம் ஆகியவற்றின் அதிகரிப்பு ... | 5·4 | 4·4 | 9·1 | 16·0 |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு ... | — | — | 54·7 | 18·2 |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சி ... | — | 6·7 | — | — |
| 4. **வெளிநாட்டுத்துறை** ... | 8·2 | — | 11·5 | 0·7 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... | — | — | 1·2 | 0·7 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | — | — | 1·3 | — |
| வெளிநாட்டு மிச்சங்களின் குறைப்பு ... | 8·2 | — | 9·0 | — |
| 5. **உள்நாட்டுப் பணவிடயங்களின் குறைவு** ... | 1·1 | — | — | 40·1 |
| வளங்களின் மொத்த அதிகரிப்பு ... | 177·3 | 157·8 | 172·1 | 175·7 |
| **நிதிகளின் பயன்பாடுகள்** | | | | |
| 1. **அரசாங்கத்துறை** ... | 25·8 | 8·7 | 92·3 | 28·2 |
| கடன்பாடுகளின் குறைவு ... | — | 5·0 | — | — |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் அதிகரிப்பு ... | — | 0·4 | 32·8 | — |
| அரசாங்கத்துக்கான குறுகியகாலத்தவணைக் கொடுகடனின் அதிகரிப்பு ... | 25·8 | 3·3 | 59·5 | — |
| வைப்புக்களின் மீட்பு ... | — | — | — | 28·2 |
| 2. **மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் குறைவு** ... | — | 18·8 | 12·8 | — |
| 3. **உள்நாட்டுத் தனியார்துறை** ... | 150·4 | 63·9 | 47·9 | 130·9 |
| முற்பணங்களின் அதிகரிப்பு ... | 136·9 | 62·8 | 4·2 | 93·7 |
| ஏனைய பொறுப்புக்களின் குறைவு ... | 1·5 | 1·1 | — | — |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு ... | 12·0 | — | 43·7 | 22·1 |
| வைப்புக்களின் மீட்பு ... | — | — | — | 15·1 |
| 4. **வெளிநாட்டுத்துறை** ... | 1·3 | 22·1 | — | 17·0 |
| கடன்பாடுகளின் குறைவு ... | 0·6 | 0·8 | — | — |
| வைப்புக்களின் மீட்பு ... | 0·7 | 0·1 | — | 1·6 |
| வெளிநாட்டு மிச்சங்களின் அதிகரிப்பு ... | — | 21·2 | — | 15·4 |
| 5. **உள்நாட்டுப் பணவிடயங்களின் அதிகரிப்பு** ... | — | 43·7 | 18·7 | — |
| நிதிவளங்களினது பயன்பாட்டின் மொத்த அதிகரிப்பு ... | 177·5 | 157·2 | 171·7 | 176·1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

1966ஆம் வரையிலான ஆண்டுகளில், வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார்துறையினது வைப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. மொத்த வைப்புக்கள் 1963ஆம் ஆண்டில் 1099 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவை 1964ஆம், 1965ஆம் ஆண்டுகளில், முறையே 1438 இலட்சம் ரூபாய்களாலும் 850 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்துள்ளன. 1966இல் இப்போக்கானது, பண நிரம்பலில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியினைப் பிரதிபலித்து மொத்த வைப்புக்கள் 151 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றபோது, மாற்றியமைக்கப்பட்டது. எனினும், உள்நாட்டுத் தனியார்துறையிலிருந்து வந்த வர்த்தக வங்கிகளது வளங்களில் 342 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளிலேற்பட்ட அதிகரிப்புக்களைவிட ஒப்பியல்பிற் சிறிதளவான இவ்வதிகரிப்பு, மூலதன ஒதுக்குகளின் அதிகரிப்பு வடிவிலும் ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு வடிவிலும் ஏற்பட்டது.

வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வளங்களில் மிகப்பெரிய பங்கானது, 1966ஆம் ஆண்டில் தனியார் துறைக்குச் சென்றது. ஆகவே, 1966ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட வளங்களில் ஏற்பட்ட 1761 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்த அதிகரிப்பு, கடந்த ஆண்டிலிருந்ததைவிடச் சிறிதளவால் மட்டுமே உயர்வடைந்திருக்கையில், இவ்வதிகரிப்பில் 1309 இலட்சம் ரூபாய்கள், தனியார்துறைக்குச் சென்றது. கடந்த ஆண்டில் தனியார்துறைக்குச் சென்றது, 479 இலட்சம் ரூபாய்கள் மட்டுமே கொண்ட தொகையாகும். எனவே, தனியார்துறை பயன்படுத்திய வர்த்தக வங்கிகளினது அதிகரித்த வளங்களின் சதவீதம், 1965ஆம் ஆண்டிற்குரிய 27·9 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டில் 74·3 சதவீதத்திற்குச் கூர்மையாக உயர்வடைய, அதே சமயம், அரசாங்கத் துறைக்கான தொடர்பான சதவீதம், 53·7 சதவீதத்திலிருந்து, 16·0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வளங்கள், அவற்றின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை 170 இலட்சம் ரூபாய்களால் அதிகரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

## 2. (உ) தனியார்துறைக்கான வங்கிக் கொடுகடன்.

தனியார்துறை பயன்படுத்திய வர்த்தக வங்கிகளது வளங்களின் 1309 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பில், 937 ரூபாய்கள், தனியார்துறையிலுள்ள வாடிக்கைக்காரர்களுக்கான அதிகரித்த கொடுகடன் வடிவத்தில் இருக்கும்போது, வங்கிகளின் ''ஏனைய இருப்புச் சொத்துக்கள்'' இல் ஏற்பட்ட 221 இலட்சம் ரூபாய்கள் கொண்டவோர் அதிகரிப்பும், தனியார்துறைக்கான வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட 151 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு வீழ்ச்சியும், எஞ்சியதற்கு வகைகூறின. பெப்புருவரி, ஓகத்து, ஒற்ரோபர், நவெம்பர், ஆகிய மாதங்களைத் தவிர, இவ்வருடத்தின் போதுள்ள ஏனைய மாதங்களில் வங்கிக் கொடுகடனிலே தொடர்ச்சியானவோர் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. 1966ஆம் ஆண்டில், தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் சராசரி மாதாந்த எண்தொகையானது, 1965ஆம் ஆண்டிற்குரிய தொடர்பான எண்தொகையைவிட, 450 இலட்சம் ரூபாய்களால் உயர்வடைந்திருந்தது.

அட்டவணை II (இ) 11, 1965ஆம் ஆண்டினிறுதியிலும், 1966ஆம் ஆண்டினிறுதியிலும், வெளிநின்ற வர்த்தக வங்கிக் கொடுகடனினது பிரதான பகுப்புக்களின் விபரங்களைக் காட்டுகின்றது.

சேகரிக்கப்படும் நிலையிலுள்ள பணவிடயங்கள், 1966ஆம் ஆண்டில் கணிசமான அளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்து, அவ்வாண்டினிறுதியில் 1071 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையினை அடைந்தன. இவ்வதிகரிப்பு, பிரதானமாக இலங்கையர் வங்கிகளிலேயே ஏற்பட்டது. இது பெருமளவில், உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் செய்யப்படும்

## அட்டவணை II (இ) 11

## தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்

## திசெம்பர் 1965 — திசெம்பர் 1966

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கையர் வங்கிகள் | | | அந்நியர் வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 1965 | திசெம்பர் 1966 | மாற்றம் | திசெம்பர் 1965 | திசெம்பர் 1966 | மாற்றம் | திசெம்பர் 1965 | திசெம்பர் 1966 | மாற்றம் |
| (அ) சேகரிப்பு நிலையில் உள்ள பண விடயங்கள்* ... | 69·7 | 105·3 | +35·6 | 1·4 | 1·8 | + 0·4 | 71·1 | 107·1 | +36·0 |
| (ஆ) உள்ளூர் உண்டியல்கள் ... | — | — | — | ... | — | — | ... | — | — |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் | 27·0 | 22·6 | — 4·4 | 22·7 | 14·3 | — 8·4 | 49·7 | 36·9 | —12·8 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள்... | 11·6 | 11·5 | — 0·1 | 35·5 | 40·9 | + 5·4 | 47·1 | 52·4 | + 5·3 |
| (உ) மேலதிகப் பற்றுக்கள் ... | 174·2 | 166·4 | — 7·8 | 208·8 | 225·5 | +16·7 | 383·0 | 391·9 | + 8·9 |
| (ஊ) கடன்கள் ... | 243·4 | 303·8 | +60·4 | 38·3 | 34·3 | — 4·0 | 281·7 | 338·1 | +56·4 |
| மொத்தம் | 525·8 | 609·6 | +83·8 | 306·8 | 316·7 | + 9·9 | 832·7 | 926·4 | +93·7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சேகரிப்புக்கென்று அனுப்பப்பட்டக் காசோலைகள் வாயிலாக எழுந்த வங்கிகளுக்கிடையே உள்ள கடனின் சிறிய அளவை இப்பகுப்பு அடக்குகின்றது. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களின் கொள்வனவுக்கான நிதியீட்டத்திற்கென கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மிகக் குறுகிய கால முற்பணங்களையே இது முக்கியமாக உள்ளடக்குகின்றது.

கொள்வனவுகளுக்கு நிதியீட்டும் நோக்கத்திற்காகக் கூட்டுறவு நிலையங்களுக்குக் கொடுக்கப்பட்ட குறுகியகாலத் தவணை முற்பணங்களைக் கொண்டுள்ளது. கொடுகடனில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு, பெரும்பாலும் ஏப்பிறல்-யூலை அறுவடைமாதங்களிலேயே ஏற்பட்டது.

1966ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான, வர்த்தக வங்கிகளின் இறக்குமதி உண்டியல்களினது உடைமைகளின் பெறுமானம், கடந்த ஆண்டினிறுதியிலிருந்த நிலையிலிருந்து, 128 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு வீழ்ச்சியைக் காட்டிற்று. எனினும், 1966ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும், இவ்வுண்டியல்களின் உடைமைகள் பெருமளவில் குறிப்பிடத்தக்கதாக இருந்தன. இவற்றிற்கான இவ்வாண்டிற்குரிய மாதாந்தச் சராசரி, கடந்த ஆண்டிலிருந்ததைவிடச் சிறிதளவு உயர்ந்திருந்தது. ஏற்றுமதி உண்டியல்களினது உடைமைகளின் மாதாந்த எண்தொகைகள் சராசரியில் 1965ஆம் ஆண்டிலிருந்தவற்றைவிடக் குறைவாக இருந்தன.

வர்த்தக வங்கிகளினது வெளிநின்ற மேலதிகப்பற்றுக்கள், இவ்வாண்டின்போது 89 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இது, அந்நியர் வங்கிகளின் மேலதிகப்பற்றுக்களில் ஏற்பட்ட 167 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பினதும், உள்நாட்டு வங்கிகளின் மேலதிகப்பற்றுக்களில் ஏற்பட்ட 78 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியினதும் தேறிய விளைவாகும்.

வர்த்தக வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பில் மிகப் பெருமளவு தொகை, தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களாக உள்ளது. இப்பகுப்பில் உள்ள வெளிநின்ற கடன்கள், இவ்வாண்டின்போது 564 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன. இவ்வதிகரிப்பில், 399 இலட்சம் ரூபாய்கள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கடன்களின் அதிகரிப்பாக இருக்கையில், 172 இலட்சம் ரூபாய்கள் தனியார்துறையிலுள்ள ஏனைய வாடிக்கைக்காரர்களுக்கான கடன்களின் அதிகரிப்பாக உள்ளது. கூட்டுறவு நிலையங்களுக்கான கடன்கள் 7 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன.

வர்த்தக வங்கிக் கடன்களிலும் மேலதிகப் பற்றுக்களிலும் 1966ஆம் ஆண்டில் 653 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பு ஏற்பட்டது. 1966ஆம் ஆண்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளில், கொடுகடனின் விரிவு, உற்பத்தித் தேவைகளுக்குத் திருப்பப்பட்டிருப்பின் மிகவும் நன்மையாக இருந்திருக்கும். எனவே, தேவைகளின்படியான வர்த்தக வங்கிக் கொடுகடனின் பாகுபாடு விளக்கமானதாக இருக்கும். அட்டவணை II (இ) 12, தேவைகளின்படியான வங்கி முற்பணங்களின் பங்கீட்டைத் தருகின்றது.

### அட்டவணை (II) இ 12

### தேவைகளின்படியும், மீள்தற்காலங்களின்படியும் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| தேவை | | குறுகியகால 6 மாதத் திற்குள் | | நடுத்தரகால (6 முதல் 30 மாதங்கள் வரை) | | நீண்டகால (3 மாதங்களுக்குமேல் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) (7)ன் சதவீதமாக (1) | (3) | (4) (7)ன் சதவீதமாக (3) | (5) | (6) (7)ன் சதவீதமாக (5) | (7) | (8) மொத்தத்தின் சதவீதமாக (7) |
| அ. வர்த்தகம் | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 183·4 | 41·2 | 182·1 | 40·9 | 80·0 | 18·0 | 445·4 | 58·4 |
| யூன் | 1966 | 177·1 | 38·5 | 199·5 | 43·4 | 83·2 | 18·1 | 459·9 | 58·5 |
| திசெம்பர் | 1966 | 158·8 | 36·7 | 188·4 | 43·5 | 85·8 | 19·8 | 433·2 | 52·7 |
| ஆ. நிதி | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 29·6 | 32·6 | 26·5 | 29·2 | 34·6 | 38·1 | 90·8 | 11·9 |
| யூன் | 1966 | 30·3 | 31·9 | 34·2 | 36·0 | 30·5 | 32 1 | 95·0 | 12·1 |
| திசெம்பர் | 1966 | 30·2 | 31·6 | 35·3 | 36·9 | 30·2 | 31·5 | 95·7 | 11·6 |
| இ. விவசாயம் | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 8·6 | 24·8 | 13·6 | 39·2 | 12·4 | 35·7 | 34·7 | 4·5 |
| யூன் | 1966 | 9·8 | 25·1 | 14·5 | 37·2 | 14·8 | 37·9 | 39·0 | 5·0 |
| திசெம்பர் | 1966 | 8·7 | 21·5 | 17·7 | 43·8 | 13·9 | 34·4 | 40·4 | 4·9 |
| ஈ. கைத்தொழில் | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 29·6 | 40·1 | 21·3 | 28·9 | 22·9 | 31·0 | 72·8 | 9·7 |
| யூன் | 1966 | 22·7 | 29·9 | 25·4 | 33·5 | 27·8 | 36·6 | 75·9 | 9·6 |
| திசெம்பர் | 1966 | 67·4 | 54·0 | 30·8 | 24·7 | 26·5 | 21·2 | 124·7 | 15·2 |
| உ. நுகர்ச்சி | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 10·9 | 16·8 | 19·9 | 30·8 | 33·9 | 52·4 | 64·7 | 8·5 |
| யூன் | 1966 | 10·4 | 16·2 | 23·9 | 37·3 | 29·8 | 46·5 | 64·1 | 8·1 |
| திசெம்பர் | 1966 | 15·1 | 20·1 | 27·0 | 35·9 | 33·1 | 44·0 | 75·2 | 9·1 |
| ஊ. ஏனைய கடன்கள் | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 25·1 | 46·9 | 9·9 | 18·5 | 18·4 | 34·4 | 53·5 | 7·0 |
| யூன் | 1966 | 23·4 | 44·3 | 12·7 | 24·1 | 16·7 | 31·6 | 52·8 | 6·7 |
| திசெம்பர் | 1966 | 21·6 | 40·7 | 17·5 | 33·0 | 13·9 | 26·2 | 53·0 | 6·4 |
| எ. மொத்தம் | | | | | | | | | |
| திசெம்பர் | 1965 | 287·2 | 37·6 | 273·5 | 35·8 | 202·2 | 26·5 | 762·9 | 100·0 |
| யூன் | 1966 | 273·7 | 34·8 | 310·1 | 39·4 | 202·8 | 25·8 | 786·6 | 100·0 |
| திசெம்பர் | 1966 | 301·8 | 36·7 | 316·8 | 38·5 | 203·6 | 24·8 | 822·2 | 100·0 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

* முற்பணங்களாவன, கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், கழிவுபட்ட உண்டியல்கள் ஆகியனவற்றை (சேகரிப்பு நிலையிலுள்ள பணவிடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

கைத்தொழிற் தேவைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் வெளிநின்ற தொகை, 509 இலட்சம் ரூபாய்களால் உயர்வடைந்துள்ளது. ஆகவே, மொத்தக் கடன்களில் இக்கடன்களின் சதவீதம், 1965ஆம் ஆண்டின் இறுதியிலிருந்த 9·7 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டின் இறுதியில் 15·2 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. இவ்வாண்டின்போது வெளிநின்ற விவசாயக் கடன்கள் 57 இலட்சம் ரூபாய்

களால் அதிகரித்துள்ளன. வர்த்தகத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் வெளிநின்ற தொகை, 122 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. மொத்தக் கடன் களில் இவற்றின் பங்கானது, தொடர்பாக 58·4 சதவீதத்திலிருந்து இவ்வாண்டினபோது 52·7 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. நிதிக் கடன்களின் வெளிநின்ற தொகையிலும், 49 இலட்சம் ரூபாய்கள் கொண்டவோர் அதிகரிப்பு ஏற்பட்டது. நுகர்ச்சிக் கடன்களின் வெளிநின்ற பெறுமானத்திலும் 105 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பொன்று ஏற்பட்டது. ஆனால், இது கடந்த ஆண்டிலேற்பட்ட அதிகரிப்பிலும்பார்க்கக் குறைவாக உள்ளது.

கைத்தொழிற் கடன்களின் பகுப்பில் ஏற்பட்ட அதிகரிப்பை, 1966ஆம் ஆண்டின் கொடுகடன் விரிவிலே, தூண்டுதலளிக்குமோர் அம்சமாகக் கருதலாம். இலங்கையிலே, வர்த்தக வங்கிக் கடன்களில் அரைப்பங்கிற்கு அதிகமானவை, வழமையாக வர்த்தகத் தேவைகளுக்காகவே வழங்கப்படுகின்றன. வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, 1966ஆம் ஆண்டில் இப்பகுப்பிற்குரிய கடன்களின் குறைப்புக்கு வகைகூறிற்றெனலாம்.

**அட்டவணை II (இ) 13**

**வட்டி வீதங்களின்படியுள்ள முற்பணங்கள்***

| வட்டி வீதம் | 1965 திசெம்பர் 31 | | 1966 யூன் 30 | | 1966 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப. இ. ரூ | மொத்தத்தின் சதவீதமாக |
| 2½ கீழ் ... | 4·4 | 0·6 | 7·8 | 1 0 | 5·1 | 0·7 |
| 2½ ... | 0·1 | ... | 0·4 | 0·1 | 0·2 | ... |
| 3 ... | 0·2 | ... | 0·2 | ... | 0·2 | .. |
| 3½ ... | 1·4 | 0·2 | 1·4 | 0·2 | 1·3 | 0·2 |
| 4 ... | 3·7 | 0·5 | 3·5 | 0·5 | 4·7 | 0·6 |
| 4½ ... | 8·8 | 1·2 | 8·5 | 1·1 | 5·7 | 0·7 |
| 5 ... | 22·3 | 3·1 | 25·1 | 3·4 | 25·7 | 3·3 |
| 5½ ... | 31·6 | 4·4 | 27·8 | 3·8 | 27·1 | 3·5 |
| 6 ... | 62·2 | 8·6 | 63·1 | 8·5 | 66·1 | 8·6 |
| 6½ ... | 130·8 | 18·2 | 155·8 | 21·0 | 119·7 | 15·5 |
| 7 ... | 235·3 | 32·7 | 224·4 | 30·3 | 212·4 | 27·5 |
| 7½ ... | 52·3 | 7·3 | 60·1 | 8·1 | 112·8 | 14·6 |
| 8 ... | 114·5 | 15·9 | 116·7 | 15·8 | 138·7 | 18·0 |
| 8½ ... | 4·2 | 0·6 | 4·4 | 0·6 | 5·5 | 0·7 |
| 9 அதற்குமேலும் | 47·3 | 6·6 | 41·3 | 5·5 | 46·6 | 6·1 |
| மொத்தம் ... | 719·2 | 100·0 | 740·5 | 100·0 | 771·7 | 100·0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* நடைமுறைச் செலாவணி வீதங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களையும், சேகரிப்பு நிலையிலிருக்கும் பணவிடயங்களையும் நீக்கி.

1965ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக்கடன்களில், 18·6 சதவீதம், 6 சதவீத வட்டியில் அன்றி அதற்குக் குறைந்த சதவீத வட்டியில் வழங்கப்பட்டது. இச்சதவீதம், 1966ஆம் ஆண்டில் 17·6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இது, உயர்ந்த வட்டி வீதங் களில் வழங்கப்பட்ட கடன்களின் விகிதசமத்தில் ஏற்பட்டவோர் அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. உயர்ந்த வட்டி வீதங்களில் கடன் வழங்குவதற்கான இவ்வுந்துதல் 7 சதவீத வட்டி வரையில் வழங்கப்பட்ட கடன்களின் விகிதசமத்தைப் பரிசீலனை செய்ததன் மூலம், உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 1965ஆம் ஆண்டில் வர்த்தக வங்கி களால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் தொகுதியில், 69·5 சதவீதம், 7 சதவீத வட்டியிலோ அன்றி அதற்குக் குறைந்த சதவீத வட்டியிலோ கொடுக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டில், இதே வட்டி வீதங்களில் வழங்கப்பட்ட கடன்களின் விகித சமம்,

மொத்தக் கடன்களில் 60·6 சதவீதமாக வீழ்ச்சியுற்றுள்ளது. வேறு சொற்களில் இதை எடுத்தியம்பின், 1965ஆம் ஆண்டிலே, மொத்தக் கடன்களின் 30·5 சதவீதமானவை, 7 சதவீத வட்டிக்குக் கூடிய வட்டிவீதங்களில் கொடுக்கப்பட்டன. 1966ஆம் ஆண்டில் இதே வட்டி வீதங்களில் கொடுபட்ட கடன்களின் சதவீதம், 39·4 சதவீதமாக உயர்ந்துள்ளது.

வர்த்தக வங்கி முற்பணங்கள் அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்டு, அட்டவணை II (இ) 14இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (இ) 14**

**அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள் ***

| | 1965 திசெம்பர் 31 | | 1966 யூன் 30 | | 1966 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப. இ. ரூ. | மொத்தத்தின் சதவீதமாக |
| ஆவண உண்டியல்கள் ... | 126·6 | 16·6 | 122·8 | 15·6 | 124·0 | 15·1 |
| அரசாங்கப் பிணைகள் ... | 4·6 | 0·6 | 6·7 | 0·9 | 7·2 | 0·9 |
| கூட்டுப்பங்கு நிலையங்களின் பங்கு முதல் ... | 18·0 | 2·4 | 18·3 | 2·3 | 14·5 | 1·8 |
| தவணை சேமிப்பு வைப்புக்களும் ஏனைய பண வைப்புக்களும் (ஆயுட்காப்புறுதிகளின் பணப் பெறுமானங்கள் உட்பட) ... | 50·9 | 6·7 | 56·5 | 7·2 | 54·4 | 6·6 |
| வியாபாரக் கையிருப்பு ... | 202·4 | 26·5 | 195·4 | 24·8 | 192·1 | 23·4 |
| அசைவற்ற சொத்து ... | 66·4 | 8 7 | 76·6 | 9·7 | 90·7 | 11·0 |
| ஏனையவை ... | 208·8 | 27·4 | 223·7 | 28·4 | 260·0 | 31·6 |
| பிணையற்றவை ... | 85·1 | 11·1 | 86·4 | 11·0 | 79·4 | 9·7 |
| மொத்தம் ... | 762·9 | 100·0 | 786·6 | 100·0 | 822·2 | 100.0 |

* சேகரிப்பு நிலையிலுள்ள பணவிடயங்களை நீக்கி.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பிணை விடயமாக உள்ள வர்த்தகக் கையிருப்பின் ஒப்பியல்பு நிலைமை 1966ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றது. இப்பிணைக்கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் பெறுமானம், 103 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றிருக்கும்போது, இதன் சதவீத நிலைமையானது, 26·5 சதவீதத்திலிருந்து 23·4 சதவீதத்திற்கு மாற்றமடைந்துள்ளது. ஆவண உண்டியல்களது உடைமைகள் 26 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. இவற்றின் சதவீத நிலைமை, 16·6 சதவீதத்திலிருந்து 15·1 சதவீதமாக வீழ்ச்சியுற்றுள்ளது. இதை, நாட்டின் வெளிநாட்டுவர்த்தகத்தில் ஏற்பட்டதளர்ச்சியின் ஒரு பிரதிபலிப்பாகக்கருதலாம். மீளப்பார்வையிடும் ஆண்டின்போது, வர்த்தக வங்கிப்பிணையாகவுள்ள அசைவற்ற சொத்தின் நிலைமை, சீர்திருந்தியுள்ளது. அசைவற்ற சொத்தினைப் பிணையாக ஏற்று, தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களின் தொகை 243 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்திருக்கையில், அதன் தொடர்பான சதவீத நிலைமை, 8·7 சதவீதத்திலிருந்து 11·0 சதவீதமாகச் சீர்திருந்தியுள்ளது. பகுக்கப்படாத வகைப்பிணைகளுக்கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் தொகை 512 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், அதன் சதவீத நிலைமை 27·4 சதவீதத்திலிருந்து, இவ்வாண்டில் 31·6 சதவீதமாகச்சீர்திருந்தியுள்ளது.

### 3. சேமிப்பு நிலையங்களும், நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிலையங்களும்

அரசாங்க ஆதரவுபெற்ற சேமிப்பு, நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிலையங்களினது கொடுகடன் தொழிற்பாடுகள், அட்டவணை II (இ) 15இல் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை II (இ) 15

### நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களின் கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963 | | 1964 | | 1965 | | 1966 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (அ) | 1,864 | 23,072 | 7,231 | 27,802 | 4,010 | 28,316 | 4,540 | 29,052 |
| இலங்கை சேமிப்பு வங்கி ... | 3,428 | 13,387 | 3,935 | 15,528 | 2,845 | 16,366 | 2,246 | 16,371 |
| கமத்தொழில் கைத்தொழில் கடனுதவிக் கூட்டுத்தாபனம் ... | 3,388 | 29,231 | 5,774 | 31,018 | 4,942 | 32,424 | 3,933 | 32,342 |
| தேசிய ஈட்டு வங்கி ... | 3,135 | 55,119 | 3,532 | 54,662 | 3,942 | 54,681 | 4,959 | 55,319 |
| கடன் சபை ... | 1,133 | 12,217 | 1,107 | 12,113 | 540 | 11,411 | 833 | 10,970 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களம் (ஆ) | 5,236 | 71,968 | 2,762 | 70,621 | 5,138 | 71,536 | 16,861 | 84,196 |
| மொத்தம் ... | 18,134 | 204,994 | 24,341 | 211,744 | 21,417 | 214,734 | 33,372 | 228,250 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒப்புரவு முதலீடுகளையும் உட்படுத்தும்.

(ஆ) எண்தொகைகள் ஒற்றோபர்/செத்தெம்பர் நிதியாண்டிற்குரியனவாகும். வழங்கப்பட்ட கடனின் எண் தொகைகள். தனியாட்களுக்கும், கட்டடச் சங்கங்களிற்கும் வழங்கிய கடன்களை மட்டுமே பிரதிபலிக்கின்றன. 1963/1966 ஆண்டுகளுக்குரிய வெளிநின்ற தொகைகள், கட்டடச் சங்கங்களிற்கு வழங்கப்பட்ட கடன்களை நீக்குவனவாகும்.

## அட்டவணை II (இ) 16

### சேமிப்பு வைப்புக்களும் சேமிப்புப் பத்திரங்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | திசெம்பர் 1965 | திசெம்பர் 1966 | மாற்றம் திசெம்பர் 1965/ திசெம்பர் 1966 |
|---|---|---|---|
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி ... | 427·1 | 428·9* | + 1·8* |
| இலங்கை சேமிப்பு வங்கி ... | 86·6 | 88·7* | + 2·1* |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு வைப்புக்கள்)** ... | 606·7 | 602·6 | — 4·1 |
| வெளிநின்ற சேமிப்புப் பத்திரங்கள் ... | 41·8 | 56·5 | + 14·7 |
| மொத்தம் ... | 1,162·2 | 1,176·7* | + 14·5* |

* தற்காலிகமானவை.

** அரசாங்க வைப்புக்களையும் உள்ளடக்கும்.

1966ஆம் ஆண்டில் சேமிப்பு, நீண்டகாலத்தவணைக் கொடுகடன் நிலையங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத்தொகை, 334 இலட்சம் ரூபாய்களாக இருந்து, கடந்த ஆண்டிற்குரியதைவிட, முக்கியமாகத் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடன்களில், 120 இலட்சம் ரூபாய்களாலான ஓர் அதிகரிப்பைக் காட்டியது. தேசிய ஈட்டு வங்கியாலும், அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தாலும் வழங்கப்பட்ட கடன்களிலும் அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருக்கும்போது, கமத்தொழில், கைத்தொழில் கடனுதவிக் கூட்டுத்தாபனத்தாலும், இலங்கைச் சேமிப்பு வங்கியாலும் வழங்கப்பட்ட கடன்கள், கடந்த ஆண்டிலிருந்தவற்றைவிடக் குறைவாக இருந்தன.

சேமிப்புப் பத்திரங்களின் மொத்தத்தொகை, தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமும், இலங்கை சேமிப்பு வங்கியிடமும் உள்ள சேமிப்பு வைப்புக்கள் வர்த்தக வங்கிகளிட முள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் ஆகியன, 1965 ஆம் ஆண்டிற்குரிய 8·4 சதவீதத் துடன் ஒப்பிடுகையில் 1966ஆம் ஆண்டின்போது 145 இலட்சம் ரூபாய்களால் அல்லது 1·2 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமும், இலங்கைச் சேமிப்பு வங்கியிடமும் உள்ள சேமிப்பு வைப்புக்கள், 39 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கும்போது, வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் 41 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சி யுற்றன. சேமிப்புப் பத்திரங்களின் வெளிநின்ற தொகை, 1965ஆம் ஆண்டிற்குரிய அதிகரிப்பாகிய 44 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் 147 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளது. இவ்வாண்டின்போதான ஊழியர் சேம நிதியினது மொத்தச் சேகரிப்புக்கள், 681 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, கடந்த ஆண்டிலிருந்த வற்றைவிட 42 இலட்சம் ரூபாய்களாலான ஓர் அதிகரிப்பை பிரதிபலித்தன.